# 8. இறைக் கொள்கையும் வரவு செலவுத் திட்ட தொழிற்பாடுகளும்

## 8.1. கொள்கை உபாயங்கள்

விலை உறுதிப்பாடு வெளிநாட்டு இயலாற்றல் என்பவற்றுடன் உறுதியான பொருளாதார வளர்ச்சியினைக் கொண்ட பேரண்டப் பொருளாதார குறிக்கோள்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் வரவு செலவுத் திட்டக் குறையினைக் குறைக்கும் நோக்குடன் நடுத்தர கால வரவு செலவுத் திட்ட வரைச் சட்டத்திற்குள் இறைக் கொள்கை வடிவமைக்கப்பட்டது. 1995 இன் வரவு செலவுத் திட்ட உரையின்போது அறிவிக்கப்பட்ட நடுத்தரகால வரவு செலவுத் திட்டவரைச் சட்டம் அரசின் இறைத் தொழிற்பாடுகளில் காணப்படும் அமைப்பு ரீதியான பலவீனங்களை திருத்துவதனை முக்கியமாக வலியுறுத்தியது. நடுத்தரகால இறைச் சீராக்க முயற்சிகள், உறுதியான செழித்த அரசிறை வளர்ச்சி, தொழிற்பாட்டுச் செலவுகளைக் கட்டுப்படுத்தல் என்பனவற்றின் மூலம் பொது முதலீடுகளைப் பாதுகாக்கும் வேளையில் உள்நாட்டுக் கடன்பாடுகள் மீதான அழுத்தத்தை விடுவிப்பதற்கு மொத்த வரவு செலவுத் திட்டக் குறையை குறைப்பதனையே நோக்கமாகக் கொண்டிருந்தன. இப்பின்னணியில், 1995 வரவு செலவுத் திட்டம் இறைச் சமமின்மையில் ஏற்படும் குறிப்பிடத்தக்க குறைப்பு–குறைப்பிலிருந்து நடைமுறைக் கணக்குக் குறையை மொ.உ.உற்பத்தியின் 0.6 சதவீதம் கொண்ட மிகைக்கு மாற்றுமெனவும், மொத்தக் குறையை 1994 இன் மொ. உ. உற்பத்தியின் 10 சதவீதத்திலிருந்து 1995 இல் 7.5 சதவீதத்திற்குக் குறைக்குமெனவும் வங்கி நிதியிடலை ரூ. 74,050 இலட்சத்தினால் அல்லது மொ. உ. உற்பத்தியில் 1.1 சதவீதத்தினால் குறைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

வரவு செலவுத் திட்டக் குறையைக் குறைக்கும் பொருட்டு 1995 இல் அரசு பல இறை வழிமுறைகளை மேற்கொண்டது. அரசிறைப் பக்கத்தில் மொத்த விற்பனை வரியின் தாழ்ந்த வீத பிரிவு, பெற்றோல் மற்றும் நீண்டகாலப் பாவனைப் பொருட்களின் மீதான கலால்வரி, பாதுகாப்புத் தீர்வை, உந்து ஊர்திகள் மீதான சுங்கத்தீர்வை என்பன உயர்த்தப்பட்டதுடன் டீசல் மீதான கலால் வரியும் அறிமுகப்படுத்தப்பட்டது. சுங்கத் தீர்வை தொடர்பான வரித்தளம் அவ்வப்போதைய தீர்வை விலக்கல்களின் நியாயப்படுத்தலின் மூலம் வலுவாக்கப்பட்டது. பாதுகாப்புத் தீர்வையிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு சுங்க நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்டது. டீசல் மீதான உள்ளடக்க விலை உதவுதொகையை மீளப் பெறும் பொருட்டு பொதுப்போக்குவரத்திற்கு பயன்படுவன தவிர்ந்த அனைத்து டீசல் உந்து ஊர்திகளின் மீதும் புதிய வரியொன்று விதிக்கப்பட்ட வேளையில், சமூகத்திலுள்ள சார்பு ரீதியில் பெரும் செல்வம் படைத்தவர்கள் மீது வரிச்சுமையை ஏற்படுத்தும் பொருட்டு ஆடம்பர உந்து ஊர்திகள் மீது மேலும் தீர்வைகள் விதிக்கப்பட்டன. உயர்ந்த வரியல்லா அரசிறை முயற்சியை வலுப்படுத்தும் பொருட்டு நிருவாகக் கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் உயர்த்தப்பட்டன. தெரிந்தெடுக்கப்பட்ட வர்த்தக அரச தொழில் முயற்சிகளின் மீதும் தீர்வையொன்று விதிக்கப்பட்டது.

செலவினப் பக்கத்தில், அரசின் தொழிற்பாட்டு செலவினைக் கட்டுப்படுத்துவதற்கு மேலதிகமாக பொருட்கள் பணிகள் மீதான கொள்வனவு மீதும் ஊர்திகள் கருவிகள் போன்ற கொள்வனவுகள் போன்ற முன்னுரிமை குறைந்த மூலதன செலவு நிகழ்ச்சித் திட்டங்களின் கொள்வனவுகள் மீதும் மற்றும் கட்டடங்களைப் புதுப்பித்தலின் மீதும் 10 சதவீத வெட்டு விதிக்கப்பட்டது. நலன்புரிச் செலவுகள் இலக்கிடப்பட்டதுடன் கோதுமை மா மீதான உதவிக்கொடுப்பனவு பெருகுவதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கோதுமை மா மீதான உதவி நிருவாக விலைகள் சீராக்கப்பட்டன.

இறைக் கொள்கை உபாயத்தில் சுங்கத்தீர்வை, வரிவிதிப்புக்கலால்வரி, அரச தொழில் முயற்சி சீரமைப்பு, அரச நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான பல முக்கிய அமைப்புச் சீரமைப்புக்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. தீர்வை விலக்கல்களைப் பயன்படுத்துவதன் மீதான கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக, மசகெண்ணெய் தவிர்ந்தவற்றிற்கு சுங்கத் தீர்வைகள் பெறுமான விகித தளத்திற்கு மாற்றப்பட்டன. உயர்ந்த நியம வீதமான 45 சதவீதம் 35 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் பலவிடயங்கள் மீதான சுங்கத் தீர்வை 10, 20 மற்றும் 35 சதவீதங்களைக் கொண்ட மூன்று நியம வீத அமைப்பின்கீழே கொண்டு வரப்பட்டன.

வரி நிருவாகத்தை மேம்படுத்தவும் உள்நாட்டுக் கைத்தொழில்கள் மீதான உயர்ந்த வரிச் சுமையைக் குறைப்பதற்குமாக வரி விதிப்பிலிருந்து

## சிறப்புக் குறிப்பு 4

### சமூக பாதுகாப்பு நடவடிக்கையொன்றாக உதவிக் கொடுப்பனவுகள்

உயர்வானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான பொருளாதார வளர்ச்சியினூடாக வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே பொருளாதாரக் கொள்கையின் முடிவான இலக்காகும். பொருளாதார வளர்ச்சியின் நன்மைகளை சமூகத்தின் மிக வறுமையான பிரிவினருக்கும் கிடைக்கச் செய்வது மிகவும் விரும்பத்தக்கதாகும். எனினும் நலன்கள் வழங்கப்படும் செயல்முறையில் குறைபாடுகள் காணப்படுவதுடன், மக்கள் தொகையின் சில பிரிவினருக்கு வளர்ச்சியின் நன்மைகள் சென்றடையப்படவில்லை. எனவே, இத்தகைய தொகுதியினரின் நலன்களைப் பாதுகாப்பதற்கான தார்மீகப் பொறுப்பு அரசாங்கங்களைச் சார்ந்ததாகும். இலங்கையில் வாயிலாக வறியவர்களுக்கும், நலிவுற்றோருக்குமான உதவி வழங்கல் எல்லா அரசாங்கங்களினதும் நிகழ்ச்சித் திட்டத்தில் முக்கிய இடத்தினைப் பெற்றது.

நலன்புரி உதவிகளைப் பெறத் தகுதியுடைய மக்கள் இரு பிரிவுகளாக அதாவது (1) வயதுமுதிர்ந்தோர், கடும் நோயாளிகள், ஊனமுற்றோர், அநாதைகள், குடும்பக் கவனிப்பைப் பெறாத பிள்ளைகள் எனவும் ஆகிய நிரந்தரவறியமக்கள், (ii) பொருளாதார ரீதியில் தொழில்வாய்ப்புப் பெறக்கூடியவர்களாயிருந்தும் பல்வேறு காரணங்களுக்காக வறுமைக் கோட்டின்கீழ் இருக்கும் தற்காலிக வறிய மக்கள் எனப் பிரிக்கப்படலாம். இவ்விரு தொகுதியினருக்கும் தேவையான உதவியை வழங்குவதையே சமூக நலத் திட்டங்கள் தமது நோக்கமாகக் கொள்ளல் வேண்டும். முதலாவது தொகுதியினருக்கு நிரந்தரமான நலன்புரித் திட்டமொன்று அவசியமானதாகும். எவ்வாறெனினும் இரண்டாவது தொகுதியினரின் வறுமையானது வறிய மக்களுக்கான வருவாய் வாய்ப்புக்களை ஊக்குவிக்கக்கூடிய கொள்கைகளினாலும் திட்டங்களினாலும் சிறந்த முறையில் எதிர்கொள்ளப்படலாம்.

இரண்டாவது உலக யுத்த காலத்தில் குடியேற்ற நாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உணவு உதவுதொகைத் திட்டம், அரிசிப் பங்கீட்டுத் திட்டம் போன்ற நிவாரண நடவடிக்கைகள், இலங்கையில் சுதந்திரம் கிடைத்த பின்புவந்த அரசாங்கங்களின் கொள்கைகளில் நேரடியான தாக்கத்தைக் கொண்டிருந்தன. பாதுகாப்பு அற்ற காலங்களில் தேவைப்பட்டோருக்கு உதவி வழங்கப்பட்டமையாவது சமூகத்தினால் பெருமளவில் தவறாக விளங்கிகொள்ளப்பட்டது. இது அரசின் கட்டாயமான தாராளத் தன்மையென கொள்ளப்பட்டதுடன் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை பூரணப்படுத்துவதற்கான விடயமாகவும் அமைந்தது. இந்நிலைமையானது சுதந்திரம்பெற்ற பின்பான அரசாங்கங்கள், அத்தியாவசிய உணவு விடயங்கள் (முக்கியதாக அரிசி) இலவசக் கல்வி, இலவச நலப்பணிகள், மற்றும் உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்ட அரச போக்குவரத்துப் போன்ற பரந்த அளவிலான நல வசதிகளை பாரபட்சமின்றி எல்லாத் தொகுதியினருக்கும் வழங்க வேண்டிய கட்டாய நிலைமைக்கு உள்ளாக்கியது. எவ்வாறாயினும் இக்கொள்கைகள் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதில் செல்வாக்கினைக் கொண்டிருந்தன. நாட்டின் பொருளாதார வளர்ச்சி வரவேற்கத்தக்கதாக இல்லாதபோதும், குறிப்பாக கல்வி, நலத்துறைகளின் பெரும்பாலான சமூகக் குறிகாட்டிகளில் இலங்கை அதன் பெரும்பாலான ஆசிய அயல்நாடுகளைவிட மேலான நிலையில் உயர்ந்த வீதங்களை அடைந்துள்ளது. அதேவேளை எப்பொழுதும் அதிகரித்துச் செல்லும் குடித்தொகைக்கு வேறுபாடற்ற நலன்புரிப் பணிகளின் வழங்கலில் செலவு எப்பொழுதும் அதிகரித்துச் செல்வதானது தொடர்ச்சியான அரச செலவுத் திட்டங்களின்மீது குறிப்பிடத்தக்க பளுவினை ஏற்படுத்தியுள்ளதுடன் வரவு செலவுத்திட்ட மூலவளங்களையும் அழித்துவிடுவதன் மூலம் முதலீட்டினையும் வளர்ச்சியினையும் வெளியேற்றுகின்றன.

1970 களின் பிற்பகுதியில் திறந்த சந்தைக் கொள்கைகளுக்கு மாறியதுடன், விலை உதவுதொகைகளினால் உருவாக்கப்பட்ட திரிபுத் தன்மைகள், சந்தைகளைச் சிறந்த முறையில் தொழிற்படுவதற்கு அனுமதிக்கும் விதத்தில் அகற்றப்பட்டன. அரச செலவினக் கொள்கையின் முக்கியமானதொரு

பண்பாக நலன்புரிச் செலவினம் ஒழுங்கமைக்கப்பட்டவேளையில், இலக்கமிடப்பட்ட உதவிக் கொடுப்பனவுகள் மற்றும் வருமான மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமாக வறிய மக்கள் பாதுகாக்கப்பட்டனர். 1986 அளவில் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டன. இது உணவுமுத்திரை, மண்ணெய் முத்திரை, பள்ளிக்கூட பருவகாலப் பயணச் சீட்டுக்கள், நண்பகல் உணவு மற்றும் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கான இலவச பாடப்புத்தகங்கள், அதேபோன்று குழந்தைகள் பால் உணவு உதவிக் பொடுப்பனவு ஆகியவற்றின் சிறந்த இலக்கிடலை இவை உள்ளடக்கியிருந்தன. எனினும், நலன்புரி நன்மைகள் அனைத்துப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குமான இலவச சீருடை போன்ற விடயங்களையும் அண்மையில் முழுக் குடித்தொகைக்குமான கோதுமைமா, பாண் உதவிக் கொடுப்பனவுகள் என்பனவற்றையும் உள்ளடக்கத்தக்கதாக வேறுபாடற்ற முறையில் மீண்டும் படிப்படியாக விரிவாக்கப்பட்டன.

1994 இல் பொதுவாக எல்லோருக்குமான கோதுமை மா உதவிக் கொடுப்பனவு அறிமுகப்படுத்தப்பட்டமையானது தாழ்ந்த வருமானத் தொகுதியினரின் வாழ்க்கைச் செலவைக் குறைத்தது. எனினும் பல சிக்கலான பிரச்சினைகளுக்கு இது வழியமைத்தது. இது இலக்கிடப்பட்ட உதவுதொகைத் திட்டக் கோட்பாட்டிலிருந்தும் விலகிக் கொண்டதுடன் முழுக் குடித்தொகையையும் மீண்டுமொருமுறை பொது நன்மை பெறுநர்களாக மாற்றியுள்ளது. உண்மையில், கோதுமை மா நுகர்வோரின் உள்ளமைப்பானது, உதவிக் கொடுப்பனவு நன்மை பெறுநர்களில் பெரும் பங்கினர் உயர்ந்த வருமானத் தொகுதியினரே என்பதனை எடுத்துக்காட்டியது. அத்துடன் இவ்வுதவிக் கொடுப்பனவு அரிசி மற்றும் உணவுப்பயிர்களின் சார்புரீதியான விலைகளையும் திரிபடையச்செய்தது. மேலதிகமாக, இத்திட்டம்வலுவடைந்து வருவதானது மூலவளங்களின் கட்டுப்பாடுகள் காரணமாக நெருக்கடிக்குள்ளாகியுள்ளமையானது, உடனடியாக திருத்த நடவடிக்கையை வேண்டிநிற்கிறது. உதவிக் கொடுப்பனவை படிப்படியாக அகற்றும் நடவடிக்கைகள் 1995 இல் தொடங்கி இப்பொழுது செயற்பட்டுவருகின்றன. 1995 இல் இவ்வுதவிக் கொடுப்பனவுகளின் நேரடிச் செலவு ரூ. 50,000 இலட்சமாக காணப்பட்டது.

பொதுவாக, சிறப்பாக இலக்கிடப்படாமையும் மூலவளங்கள் வரையறுக்கப்பட்டுள்ளமையும் பல நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகவுள்ள வேளையில் அவற்றின் உண்மையான நன்மைகள் காலப்போக்கில் தேய்வடைந்துள்ளன. மேலதிகமாக, பரந்தளவிலான தன்மைகளைக் கொண்ட இந்நலன்புரித் திட்டங்களில் சில மூலவள ஒதுக்குகளை திரிபடையச் செய்த வேளையில் அதேபோன்று தொழிற் சந்தையையும் பாதித்தது. ஆகவே மக்களின் வருமான உருவாக்க வாய்ப்புக்களை முன்னேற்றும் குறிக்கோளுடன், சிறப்பான இலக்கிடல் அதேபோன்று அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களில் மக்களின் தீவிரமான பங்கேற்பினை ஊக்குவிப்பதன் மூலமாக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் பயனுறுதியை மேம்படுத்தும் விதத்தில் அவற்றின்மீது அரசாங்கம் தலையிட்டு அண்மைக் காலமாக நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இதுவே 1989 இன் பிற்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சனசவிய நிகழ்ச்சித் திட்டத்தினதும் 1995 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தினதும் தொனிப் பொருளாக இருந்தது. அடிப்படை வசதிகளுக்கான வாய்ப்புக்களை உயர்ந்தளவில் வழங்குகின்றமையின் மூலம் வறியமக்களை உற்பத்தி செயற்பாடுகளுடன் இணைப்பதற்கு இத்திட்டங்கள் எதிர்பார்க்கின்றன. அவற்றின் இலக்கிடலும் சமூகத்தில் மக்களைத் தெரிவு செய்யும் செயற்பாடுகளின் மூலம் மேம்படுத்தப்பட்டன. சமூகத்திலிருந்து மக்களை தெரிவு செய்தல் போன்றவற்றின் மூலம் வாய்ப்பற்ற பாதிக்கப்பட்ட தொகுதியினரின் தாக்கத்தினை ஆகக் குறைக்கக்கூடியதாக இருக்குமென்பதனை சனசக்தி, சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்கள் எடுத்துக்காட்டின. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் சமூக பாதுகாப்புநன்மைகளின் இறுதிக் குறிக்கோளான "தற்காலிக வறிய மக்களுக்கு" வறுமைக் கோட்டிற்கு மேலே அவர்களின் வருமான வாய்ப்புக்களை வழங்குகின்றமைக்கு உதவுகின்ற கொள்கையுடன் இணங்கிச் செல்வனவாகவுள்ளன.


பெருந்தொகையான விடயங்கள் அகற்றப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் கலால் வரிவிதிப்பு தொடர்பான அனைத்தையும் உள்ளடக்கியதொரு சீரமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. உள்நாட்டு பியர் கைத்தொழிலில் முதலீட்டினை மேம்படுத்தும் பொருட்டு பியர் மீதான கலால் தீர்வை குறைக்கப்பட்டது. வரி நிருவாகத்தினை இலகுபடுத்தி மேம்படுத்தும்பொருட்டு பதனிடப்பட்ட புகையிலை மற்றும் சிகரட்டுக்கள் மீதான தனித்தனியான வரிவிதிப்பு, சிகரட்டுக்களின் விற்பனை மீதான ஒற்றை கட்ட கலால் வரிக்கு ஒருமுகப் படுத்தப்பட்டது.

மூலதனப் பாய்ச்சலை ஊக்குவிக்கும் பொருட்டு மிக முக்கியமான தொழில் முயற்சிகளில் தனியார்துறைப் பங்கினை புத்துயிர்ப்பிக்கவும் இறைச் சூழ்நிலைமையை மேம்படுத்தவும் உட்கட்டமைப்பு, பெருந்தோட்டம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை உள்ளடக்கிய தொழில் முயற்சிகளின் அரச தொழில் முயற்சி சீரமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினைத் தொடங்கியது. அத்தகைய சீரமைப்பினை ஒழுங்கமைந்த முறையை பொறுப்பேற்பதற்கான நிறுவன ரீதியான ஒழுங்குகளின் பொருட்டு அரச தொழில் முயற்சி சீரமைப்பு மீதான செயலணிக்குழு அரச தொழில் முயற்சி சீரமைப்பு ஆணைக்குழுவாக அரசினால் மாற்றப்பட்டது.

இறைப் பக்கத்தில் சீரமைப்பு, அரச நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களில் செறிந்திருந்தது. வறுமை ஒழிப்பிற்கு நன்கிலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றினை கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில், உணவு மண்ணெண்ணெய் முத்திரைப் திட்டம், பள்ளிக்கூட நண்பகல் உணவு, சனசக்தி என்பனவற்றிற்குப் பதிலாக சமுர்த்தி என அழைக்கப்படும் புதிய நிகழ்ச்சித் திட்டமொன்றினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டம் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள ஏறத்தாழ 12 இலட்சம் குடும்பங்கள் அரசிடமிருந்து நேரடி உதவிகளைப் பெறும் விதத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

## 8.2 வரவு செலவுத் திட்ட வெளிப்பாடு

1995 இல் இறைத் தொழிற்பாடுகள் இறைத் திரட்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்தின. நடைமுறைக் கணக்குக்குறை முன்னைய ஆண்டின் மொ. உ. உற்பத்தியின் 2.9 சதவீதத்திலிருந்து 1995 இன் மொ. உ. உற்பத்தியில்



வரைபடம் 8.1
இறைக் குறிகாட்டிகள்

1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த வரவு செலவுத் திட்டக் குறை 1994 இல் மொ. உ. உற்பத்தியில் 10 சதவீதத்திலிருந்து 1995 இல் 8.4 சதவீதத்திற்குக் குறைவடைந்தது.

பல்வேறுபட்ட கொள்கைச் சீரமைப்புக்களினது தாக்கத்தின் கீழ் தனியார் வருமானவரி, உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் பணிகள் மீதான வரிகள் என்பனவற்றில் காணப்பட்ட செழிப்பான அரசிறை வளர்ச்சியானது தெரிந்தெடுக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகளின் மீதான தீர்வையுடன் சேர்ந்து அரசின் அரசிறையை 1994 இன் மொ. உ. உற்பத்தியின் 19 சதவீதத்திலிருந்து 1995 இல் 20.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும் பல புதிய வழிமுறைகளின் முழு ஆண்டுக்குமான தாக்கமும் நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக அரச அரசிறை முயற்சிகளில் பிரதிபலிக்கப்படவில்லை. பாதுகாப்பு, உள்நாட்டுப் பாதுகாப்புத் தொடர்பான செலவினம் உயர்கின்றமை, அரச ஊழியர்களின் உயர்த்தப்பட்ட சம்பளங்கள், ஓய்வூதியங்கள், உணவு, உதவிக்கொடுப்பனவு மீதான உயர்ந்த செலவுகள் உள்நாட்டுப் படுகடன் மீதான நிலைத்த வட்டிச்சுமை என்பனவற்றின் காரணமாக நடைமுறைச் செலவினம் முன்னைய ஆண்டினைப் போன்று மொ. உ. உற்பத்தியில் 22 சதவீதமாக இருந்தது. இதன் விளைவாக, வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு மொ. உ. உற்பத்தியில் 1.5 சதவீதமான அளவிற்கு பற்றாக்குறையைக் கொண்டிருந்தது.

நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மொ. உ. உற்பத்தியின் 7.9 சதவீதம் கொண்ட அரச முதலீடுகளுடன் சேர்ந்ததனால் அரசு மொத்த வரவு செலவுத் திட்ட குறையை 1995 இன் மொ. உ. உற்பத்தியில் 8.4 சதவீதத்தில் கட்டுப்படுத்த முடிந்தமைக்கு அரச தொழில் முயற்சி

## அட்டவணை 8.1

## அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1995 தற்காலிகம் | 1996 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் | 84,049 | 94,061 | 106,364 | 118,295 | 146,040 | 145,286 | 157,207 |
| மொத்த அரசிறை | 76,179 | 85,781 | 98,339 | 110,038 | 137,110 | 136,258 | 148,207 |
| வரி அரசிறை | 68,157 | 76,353 | 85,891 | 99,417 | 121,324 | 118,543 | 132,645 |
| வரியில்லா அரசிறை | 8,022 | 9,428 | 12,448 | 10,621 | 15,786 | 17,715 | 15,562 |
| கொடைகள் | 7,870 | 8,280 | 8,025 | 8,257 | 8,930 | 9,028 | 9,000 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன வழங்கலும் | 119,527 | 116,973 | 140,460 | 167,768 | 186,595 | 191,568 | 208,485 |
| நடைமுறை | 83,756 | 89,639 | 102,288 | 127,084 | 133,424 | 146,061 | 169,781 |
| மூலதன | 25,304 | 24,948 | 33,662 | 30,391 | 42,668 | 40,907 | 43,203 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் | 10,467 | 2,386 | 4,510 | 10,293 | 10,503 | 4,600 | -4,499 |
| நடைமுறைக் கணக்குமிகை/குறை (-) | -7,577 | -3,858 | -3,949 | -17,046 | 3,680 | -9,803 | -21,574 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) | -43,348 | -31,192 | -42,121 | -57,730 | -49,485 | -55,310 | -60,278 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) | -35,478 | -22,912 | -34,096 | -49,473 | -40,555 | -46,282 | -51,278 |
| நிதியிடல் | 35,478 | 22,913 | 34,096 | 49,474 | 40,555 | 46,282 | 51,279 |
| வெளிநாட்டுக் கடன்பாடு | 19,329 | 7,361 | 9,855 | 11,778 | 18,382 | 12,310 | 19,078 |
| உள்நாட்டுக் கடன்பாடு | 16,149 | 15,552 | 24,241 | 37,696 | 22,173 | 33,972 | 32,201 |
| சந்தையல்லாக் கடன்பாடு | 691 | -3,205 | 2,012 | -666 | 0 | 548 | 0 |
| சந்தைக் கடன்பாடு | 15,458 | 18,757 | 22,229 | 38,362 | 22,173 | 33,424 | 32,201 |
| வங்கியல்லா | 15,423 | 21,079 | 28,308 | 37,205 | 29,578 | 26,359 | 32,201 |
| வங்கி | 35 | -2,322 | -6,079 | 1,157 | -7,405 | 7,065 | 0 |

### மொ.உ.உ. இன் சதவீதமாக

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1995 தற்காலிகம் | 1996 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் | 22.6 | 22.1 | 21.4 | 21.4 | 22.1 | 21.9 | 20.3 |
| மொத்த அரசிறை | 20.4 | 20.2 | 19.7 | 19.0 | 20.8 | 20.6 | 19.1 |
| வரி அரசிறை | 18.3 | 17.9 | 17.2 | 17.2 | 18.4 | 17.9 | 17.1 |
| வரியில்லா அரசிறை | 2.2 | 2.2 | 2.5 | 1.8 | 2.4 | 2.7 | 2.0 |
| கொடைகள் | 2.1 | 1.9 | 1.6 | 1.4 | 1.4 | 1.4 | 1.2 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் | 32.1 | 27.5 | 28.1 | 29.0 | 28.3 | 28.9 | 26.9 |
| நடைமுறை | 22.5 | 21.1 | 20.5 | 22.0 | 20.2 | 22.1 | 21.9 |
| மூலதன | 6.8 | 5.9 | 6.7 | 5.2 | 6.5 | 6.2 | 5.6 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் | 2.8 | 0.6 | 0.9 | 1.8 | 1.6 | 0.7 | -0.6 |
| நடைமுறைக் கணக்குமிகை/குறை ( ) | -2.0 | -0.9 | -0.8 | -2.9 | 0.6 | -1.5 | -2.8 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) | -11.6 | -7.3 | -8.4 | -10.0 | -7.5 | -8.4 | -7.8 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) | -9.5 | -5.4 | -6.8 | -8.5 | -6.1 | -7.0 | -6.6 |
| நிதியிடல் | 9.5 | 5.4 | 6.8 | 8.5 | 6.1 | 7.0 | 6.6 |
| வெளிநாட்டுக் கடன்பாடு | 5.2 | 1.7 | 2.0 | 2.0 | 2.8 | 1.9 | 2.5 |
| உள்நாட்டுக் கடன்பாடு | 4.3 | 3.7 | 4.9 | 6.5 | 3.4 | 5.1 | 4.2 |
| சந்தையல்லாக் கடன்பாடு | 0.2 | -0.8 | 0.4 | -0.1 | - | 0.1 | 0.0 |
| சந்தைக் கடன்பாடு | 4.1 | 4.4 | 4.4 | 6.6 | 3.4 | 5.0 | 4.2 |
| வங்கியல்லா | 4.1 | 5.0 | 5.7 | 6.4 | 4.5 | 4.0 | 4.2 |
| வங்கி | ... | -0.5 | -1.2 | 0.2 | -1.1 | 1.1 | 0.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

சீரமைப்புக்களின் பேரிலான உட்பாய்ச்சல்களும் அரசின் வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கான கடந்த கால கடன் வழங்கலின் பெறுகைகளுமே காரணமாகும்.

நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, மொத்த வரவு செலவுத் திட்டக் குறை இரண்டும் முன்னைய ஆண்டின் குறைகளான முறையே 2.9 சதவீதம் 10 சதவீதம் என்பனவற்றிலும் பார்க்கக் குறைவாக இருந்த போதும் செயலாற்றம் எதிர்பார்ப்பிற்கும் கீழேயே இருந்தன. ஆரம்ப குறை (வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலான குறை) 1994 இன் மொ. உ. உற்பத்தியின் 3.4 சதவீதத்திலிருந்து 1995 இன் மொ. உ. உற்பத்தியில் 2.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் பாதுகாப்பு செலவினம் நீங்கலான குறை 5.4 சதவீதத்திலிருந்து 3.2 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளமை நாட்டின் இறைத் தொழிற்பாடுகள் மீது உயர்ந்த உள்நாட்டுப் படுகடன் மற்றும் பாதுகாப்பு செலவு என்பனவற்றின் அழுத்தம் வலுவாக வலியுறுத்தப்படத்தக்கதென்பதனை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அரசதுறை தொழில் முயற்சி சீராக்கங்கலிருந்தான பெறுகைகள் நீங்கலான குறை மொ. உ. உற்பத்தியின் 10.5 சதவீதத்திலிருந்து மொ. உ. உற்பத்தியின் 8.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

வெளிநாட்டுக் கொடைகள் மற்றும் சலுகை உதவிகளின் பயன்பாடு 1994 இன் மொ. உ. உற்பத்தியின் 3.4 சதவீதத்திலிருந்து 1995 இல் மொ. உ. உற்பத்தியின் 3.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் வரவு செலவுத் திட்டக் குறையின் தேறிய உள்நாட்டு நிதியிடல் 1994 இன் மொ. உ. உற்பத்தியில் 6.5 சதவீதத்திலிருந்து 1995 இல் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் வங்கி நிதியிடலை ரூ. 74,050 இலட்சத்தினால் குறைப்பதென்ற இலக்கு அடையப்படவில்லை. பதிலாக, வங்கி நிதியிடல் ரூ. 70,650 இலட்சத்தினால் அல்லது மொ. உ. உற்பத்தியில் 1.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசின் உள்நாட்டு மூலவளத் தேவைகள் வங்கியல்லா சந்தைக் கடன்பாடுகளினூடாகவே பெருமளவிற்கு ஈடுசெய்யப்பட்டன. சென்மதி நிலுவைக் குறை, தனியார்துறையின் வலுவான உயர்ந்த கொடுகடன் கேள்வி என்பனவற்றின் பின்னணி இறுக்கமான திரவநிலைமைக்கு வழிவகுத்ததுடன் 1995 இறுதியில் திறைசேரி உண்டியல் வீதங்களும் மற்றைய வட்டி வீதங்களும் மிகக் கூடுதலாக உயர்வடைந்தன. இப்பின்னணியில் மத்திய வங்கிக்கான திறைசேரி உண்டியல் விற்பனைகளூடாக அரசாங்கம் அதிகரித்த வங்கி நிதியிடலை நாடியது. இதனால் வரவு செலவுத் திட்ட தொழிற்பாடுகள் இவ்வாண்டில் உயர்வாகக் காணப்பட்ட பண நிரம்பலின் மீது விரிவுத் தாக்கமொன்றை ஏற்படுத்தின.

### 8.3 அரசிறைகளும் கொடைகளும்

1995 இல் அரசின் அரசிறை ரூ. 1,362,580 இலட்சமாக விளங்கி, முன்னைய ஆண்டின் 12 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 24 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. மொத்த அரசிறை ரூ. 1,185,430 இலட்சமாக அமைந்து 19 சதவீத அதிகரிப்பினைக் காட்டியதுடன் மொ. உ. உற்பத்தியின் விகிதமாகப் பார்க்கையில் 1994 இன் 17.2 சதவீதத்திலிருந்து 17.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனை வரி, பாதுகாப்புத் தீர்வை, கலால்வரிகள், இறக்குமதித் தீர்வை, மற்றும் வருமானவரிகள் போன்ற வரிகளின் அனைத்து முக்கிய மூலகங்களும் வரி அரசிறையில் வலுவான செழித்த வளர்ச்சிக்குப் பங்களித்தன. தெரிந்தெடுக்கப்பட்ட வர்த்தக ரீதியான அரச முயற்சிகள் மீது விதிக்கப்பட்ட தீர்வைகளின் தாக்கம் காரணமாக வரியல்லா அரசிறையும் கூட 67 சதவீதம் கொண்ட உறுதியான வளர்ச்சியைக் காட்டியது.

#### வரிஅரசிறை

வரி அமைப்பிலுள்ள பாதுகாப்புத் தீர்வை கலால்வரி மற்றும் மொத்த விற்பனை வரி போன்ற உள்நாட்டுப் பொருட்கள் பணிகள் மீதான வரிகளில் அதிகரித்தளவிற்கு தங்கியுள்ளமையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் பொருட்கள், பணிகள் மீதான வரிகளிலிருந்தான அரசிறையின் பங்கு 1994 இன் 57 சதவீதத்திலிருந்து 1995 இல் 60 சதவீதத்திற்கு அதிகரித்தது. இம் மூலத்திலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் 18 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 25 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் மொ. உ. உற்பத்தியில் 10.7 சதவீதத்திற்கும் வகைகூறியது.

ஏற்றுமதிகள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட பணிகள் தவிர்ந்த அனைத்துப் பொருட்கள் மீதும் விதிக்கப்பட்ட பாதுகாப்புத் தீர்வை ரூ. 144,080 இலட்சங்களை (மொ. உ. உற்பத்தியில் 2.2 சதவீதம்) உருவாக்கியதுடன் 1995 இல் 49 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு . பாதுகாப்புத் தீர்வை 3.5 சதவீதத்திலிருந்து 1995 யூனில் 4.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமை காரணமாக இருந்ததுடன்

இறக்குமதி தொடர்பான சீர்திருத்தங்களைப் பொறுத்தவரை நாணயக் கடிதம் திறக்கப்படும் வேளையில் வங்கியிலிருந்து தீர்வையைச் சேகரிக்கும் முன்னைய நடைமுறைக்குப் பதிலாக சுங்கத் தலங்களிலேயே தீர்வை விதிக்கப்பட்டமையும் காரணமாகும்.

1995 இல் மொத்த விற்பனை வரிகளிலிருந்தான அரசிறை ரூ. 364,290 இலட்சமாக அமைந்து 13 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தமைக்கு இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனை வரியிலிருந்தான செழித்த அரசிறை வளர்ச்சியும், மிகக் குறைந்த வரிப்பிரிவு 5 சதவீதத்திலிருந்து 1995 பெப்புருவரியில் 6 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமையும் பெருமளவிற்குக் காரணங்களாகும். தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகளில் மெதுவான வளர்ச்சியும் சுங்கத் தீர்வைகளில் இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனை வரி குறைப்புக்களும் காணப்பட்ட போதும் ரூ. 194,490 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் 7 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 17 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்கு வரி விலக்கல்களும், வரி விலை தவிர்ப்புக்களும் 1995 பெப்புருவரியில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமையே பெருமளவு காரணமாகும். தயாரிப்புக்கள் மீதான மொத்த விற்பனை வரியிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் ரூ.99,060 இலட்சமாக அமைந்து 1994 இல் அவதானிக்கப்பட்ட 1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. தயாரிப்பல்லா துறையிலிருந்தான மொத்த விற்பனை வரியின் பேரிலான அரசிறை ரூ. 70,740 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் 34 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.

பெறப்பட்ட கலால் வரிகள் ரூ. 194,360 இலட்சமாக அமைந்து 33 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இது வரி அரசிறையில் 16 சதவீதத்திற்கு வகைகூறியது. மொ. உ. உற்பத்தியின் விகிதமாகப் பார்க்கையில், இது 1994 இன் 2.5 சதவீதத்திலிருந்து 1995 இர் 2.9 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. குடிவகை மீதான கலால்வரிகள் ரூ. 62,980 இலட்சமாக அமைந்து 34 சதவீத அதிகரிப்பைக் காட்டியமையானது 1995 சனவரியில் ஒரு புறூவ் லீற்றர் சாராயத்திற்கான கலால் தீர்வை ரூ. 17.80 சதத்தினாலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு வகை வெறியங்களின் கலால் தீர்வை புறூவ் லீற்றர் ஒன்றிற்கு ரூ. 25.90 இனாலும் மேல்நோக்கித் திருத்தப்பட்டமையும், குடிவகை உற்பத்தி 9 சதவீதத்தினால் அதிகரித்தமையையும் பிரதிபலிப்பதாயுள்ளது. பதனிடப்பட்ட புகையிலை மற்றும் சிகரட்டுக்கள் மீதான கலால் வரி ரூ. 87,880 இலட்சமாக அமைந்து 11 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தமைக்கு சிகரட்டுக்கள் மீதான கலால் வரி அதிகரித்தமையும் புகையிலை மற்றும் சிகரட்டுக்களின் உற்பத்தி 3 சதவீதத்தினால் உயர்ந்தமையுமே காரணங்களாகும். அதேவேளை பெற்றோல் (லீற்றர் ஒன்றிற்கு ரூ. 2 இலிருந்து ரூ. 7 இற்கு) மீதான கலால்வரியின் அதிகரிப்பு, டீசல் மீது லீற்றர் ஒன்றிற்கு ரூ. 1 கொண்ட கலால் தீர்வை விதிக்கப்பட்டமை, 1995 பெப்புருவரியில் தெரிந்தெடுக்கப்பட்ட நீண்டகால நுகர்வுப் பொருட்களின் கலால் தீர்வை வீதங்களின் அதிகரிப்பு என்பன 1995 இல் அரசிறைச் சேகரிப்புக்களை ரூ. 43,500 இலட்சத்திற்கு ரூ. 22,920 இலட்சத்தினால் அதிகரித்தன. 1995 நவெம்பரில் கலால் வரிகள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டன. அத்துடன், பதனிடப்பட்ட புகையிலை, சிகரட்டுக்கள் மீதான தனித்தனி கலால் வரிகள் பன்னாட்டு நடைமுறைகளுக்கேற்ப ஒருமுகப்படுத்தப்பட்டன.


ஆகக்கூடிய தீர்வை 45 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமை பருப்பு, கருவாடு போன்ற இன்றியமையாத உணவு விடயங்களின் விலக்களிப்பு, பால்மா, சீனி, சீமெந்து, நூலிழை என்பன தொடர்பான சலுகை வீதங்கள், இறக்குமதிகளின் மெதுவான வளர்ச்சி என்பன காணப்பட்டபோதும் இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறை ரூ. 243,650 இலட்சமாக அமைந்து 8 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. எனினும் மொ. உ. உற்பத்தியுடன் தொடர்பான இதன் விகிதம் 1994 இன் 3.9 சதவீதத்திலிருந்து 1995இல் 3.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சுங்கத் தீர்வைகள் 10, 20, 35 சதவீதங்களைக் கொண்ட மூன்று வரிப்பிரிவிற்கு ஒழுங்குபடுத்தப்பட்டது. எனினும் குடிவகை, புகையிலை, பயணிகள் உந்து ஊர்திகள், மற்றும் குறிப்பிட்ட ஆடம்பரப் பொருட்கள் என்பன சமூக மற்றும் பங்குடமைக்காரர்களுக்காக இத் திருத்தங்களிலிருந்தும் விலக்கப்பட்டன. சுங்கத் தீர்வைச் சீரமைப்புக்கள் இறக்குமதிகளின் மெதுவான வளர்ச்சியுடன் சேர்ந்து நெய்யப்பட்ட புடவை வேளாண்மைப் பொறித் தொகுதிகள், உள்ளீடுகளும் கருவிகளும், பொதுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் ஊர்திகள், ஈருருளிகள், உந்து ஊர்திகளின் உதிரிப்பாகங்களும் துணைப் பாகங்களும் போன்ற பரந்தளவிலான பண்டங்களுக்கு பொருந்தத்தக்க இறக்குமதித் தீர்வைகளில் குறைப்பை ஏற்படுத்தியது. முன்னர் 35 – 45 சதவீத உயர்ந்தவீத வரிகளுக்கு உட்பட்டிருந்த மேற்கூறப்பட்ட பொருட்கள்

தற்பொழுது 20 - 35 சதவீதம் கொண்ட குறைந்த வரி வீதங்களின் கீழ் பாகுப்படுத்தப்பட்டுள்ளன.

தனியாள் மற்றும் கூட்டு வருமானம் மீதான வரிகளிலிருந்தான அரிசிறை ரூ. 171,610 இலட்சமாக அமைந்து வரி அரசிறையில் 14 சதவீதத்திற்கு வகை கூறியது. வருமான வரி /மொ. உ. உற்பத்தி விகிதம் முன்னைய ஆண்டினைப் போன்றே 2.6 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. 1994 இன் வரியற்ற வருமான கீழ்மட்டமான ரூ. 42,000 இற்கும் தொழில் மூல வருமான வரிச் சலுகையான ரூ. 6,000 இற்கும் எதிராக 1995 இல் வரியற்ற வருமான கீழ் மட்டம் ரூ. 60,000 இற்கும் தொழில் மூலமான வருமானத்திற்கான வரிச்சலுகை உயர்வாக ரூ. 15,700 இற்கும் அதிகரிக்கப்பட்டபோதும் 1995 இல் தனியார் வருமான வரிச் சேகரிப்பு ரூ. 73,580 இலட்சமாக அமைந்து 31 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. கூட்டு வருமானவரிகளிலிருந்தான அரசிறை ரூ. 98,030 இலட்சத்திற்கு உயர்ந்து 2 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

வரைபடம் 8.2

அரசிறை உள்ளமைப்பு - 1990, 1995




1995 இல் முத்திரைத் தீர்வை ரூ. 51,620 இலட்சமாக அமைந்து 18 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. செழிப்பான அரசிறை வளர்ச்சியை உருவாக்கும் நோக்குடன் 1995 நவெம்பரில் பெறுகைகள் மீதான முத்திரைத் தீர்வைகள் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியடிப்படையில் படிப்படியாக அதிகரித்துச் செல்லும் முறைக்கு கொண்டுவரப்பட்டன. மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களின் அதிகரித்த இருப்பின் விளைவாக மத்திய வங்கிவசமிருந்த திறைசேரி உண்டியல்கள் மீதான வரி ரூ. 10,500 இலட்சத்தினை உருவாக்கின. அதேவேளை உரிமக் கட்டணங்கள் 1994 இன் ரூ. 600 இலட்சத்திலிருந்து, 1995 இல் ரூ. 5,240 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதில் ரூ. 1,670 இலட்சம், 1995 ஏப்பிரலில் பயன்பாட்டிற்கு வந்ததும் 1995 இல் நடைமுறைப்படுத்தப்பட்டதுமான ஆடம்பர உந்து ஊர்தி மற்றும் தனியார் டீசல் ஊர்தி வரிகளினூடாக சேகரிக்கப்பட்டது. எனவே இவ்வரசிறை வழிமுறைகளின் முழுமையான தாக்கம் 1995 இன் வரவு செலவுத் திட்ட வேலைப்பாட்டில் உணரப்படவில்லை. உந்து ஊர்திகள் மீதான இப் புதிய வரியின் கீழ், ஆடம்பர ஊர்திகளின் மீது ஆண்டு வரியாக ஊர்தியொன்றிற்கு ரூ. 25,000 - 50,000 விதிக்கப்பட்ட வேளையில், சரக்கு வண்டிகள் மற்றும் பொதுப் போக்குவரத்து, வேளாண்மை என்பனவற்றின் பயன்பாட்டிற்கான ஊர்திகள் தவிர்ந்த டீசல் ஊர்திகளின் மீது ஆண்டு வரியாக ரூ. 5,000 - ரூ. 10,000 விதிக்கப்பட்டது.

### வரியல்லா அரசிறை

வரியல்லா அரசிறை ரூ. 177,150 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினை விட 67 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 1995 இன் மொத்த அரசிறையின் வரியல்லா அரசிறை 13 சதவீதத்திற்கு வகைகூறியது. இலங்கை மின்சபை மீதான ரூ. 15,000 இலட்சம், இலங்கை ரெலிகொம் மீதான ரூ. 10,000 இலட்சம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மீதான ரூ. 2,500 இலட்சம் கொண்ட தீர்வைகள் 1995 இன் வலுவான உயர்ந்த வரியல்லா அரசிறைக்குப் பங்களித்தன. அரச திணைக்களங்களால் வழங்கப்படும் பணிகளின் மீதான கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் 1995

அட்டவணை 8.2

## கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1995 தற்காலிகம் | 1996 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **வரி அரசிறை** | **68,157** | **76,353** | **85,891** | **99,417** | **121,324** | 118,543 | **132,645** |
| வருமானவரிகள் | 9,722 | 10,967 | 12,543 | 15,277 | 15,420 | 17,161 | 17,299 |
| தனியார் | 3,539 | 4,067 | 5,235 | 5,621 | 5,270 | 7,358 | 5,537 |
| கூட்டு | 6,183 | 6,900 | 7,308 | 9,656 | 10,150 | 9,803 | 11,762 |
| சொத்துக்கள் மீதான வரிகள் | 3,541 | 3,597 | 3,493 | 4,386 | 4,667 | 5,162 | 5,839 |
| மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | 3,033 | 1,991 | 1,073 | 471 | - | 1,050 | - |
| உள்நாட்டு பொருட்கள் பணிகள் மீதான வரிகள் | 32,107 | 38,158 | 47,963 | 56,685 | 72,495 | 70,797 | 80,807 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி | 21,430 | 24,095 | 29,663 | 32,300 | 39,005 | 36,429 | 40,695 |
| தயாரிப்பு | 7,945 | 8,262 | 9,231 | 9,171 | 11,380 | 9,906 | 9,699 |
| தயாரிப்பல்லாத | 2,974 | 3,546 | 4,825 | 6,445 | 8,180 | 7,074 | 8,772 |
| இறக்குமதிகள் | 10,511 | 12,287 | 15,607 | 16,684 | 19,445 | 19,449 | 22,224 |
| கலால் வரி | 10,597 | 10,232 | 11,655 | 14,632 | 20,339 | 19,436 | 21,775 |
| குடிவகை | 3,126 | 3,434 | 4,063 | 4,686 | 5,410 | 6,298 | 5,950 |
| புகையிலை | 6,884 | 5,573 | 6,866 | 7,888 | 10,232 | 8,788 | 11,195 |
| ஏனையவை | 587 | 1,225 | 726 | 2,058 | 4,697 | 4,350 | 4,630 |
| பாதுகாப்பு வரி | – | 3,764 | 6,589 | 9,683 | 10,887 | 14,408 | 16,090 |
| உரிமக் கட்டணங்கள் | 80 | 67 | 56 | 60 | 2,264 | 524 | 2,247 |
| பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் | 19,754 | 21,640 | 20,819 | 22,598 | 28,742 | 24,373 | 28,700 |
| இறக்குமதிகள் | 18,617 | 20,819 | 20,762 | 22,598 | 28,742 | 24,365 | 28,700 |
| ஏற்றுமதிகள் | 1,137 | 821 | 57 | – | – | 8 | - |
| தேயிலை | 492 | 360 | 23 | – | – | - | - |
| இதில் பெறுமான விகிதவரி | 298 | 226 | – | – | – | - | - |
| இறப்பர் | 476 | 318 | 16 | – | – | - | - |
| தெங்கு | 125 | 117 | 4 | – | – | - | - |
| ஏனைய ஏற்றுமதிகள் | 44 | 26 | 14 | – | – | 8 | - |
| **வரியல்லா அரசிறை** | **8,022** | **9,428** | **12,448** | **10,621** | **15,786** | 17,715 | **15,562** |
| சொத்து வருவாய் | 5,964 | 6,262 | 8,154 | 7,459 | 10,140 | 12,856 | 10,082 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் | 500 | 1,150 | 1,000 | 1,200 | 1,200 | 1,200 | 1,200 |
| வட்டி வருவாய் | 2,617 | 3,596 | 4,390 | 4,560 | 5,635 | 6,946 | 6,006 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை | 2,612 | 1,179 | – | – | 482 | - | - |
| கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் | 917 | 1,225 | 1,303 | 988 | 2,613 | 1,751 | 2,650 |
| ஏனைய வரியில்லா அரசிறை | 1,141 | 1,941 | 2,991 | 2,273 | 3,033 | 3,108 | 2,830 |
| **மொத்த அரசிறை** | **76,179** | **85,781** | **98,339** | **110,038** | **137,110** | **136,258** | **148,207** |

(தொடரும்)

* வங்கிகளின் மறுசீரமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட முறிகளின் மீதான தடுத்துவைத்தல் வரிஉட்பட.

அட்டவணை 8.2 (தொடர்ச்சி)

## கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு (மொ.உ.உ. இன் சதவீதமாக)

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1995 தற்காலிகம் | 1996 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **வரி அரசிறை** | **18.3** | **17.9** | **17.2** | **17.2** | **18.4** | 17.9 | **17.1** |
| வருமானவரிகள் | 2.6 | 2.6 | 2.5 | 2.6 | 2.3 | 2.6 | 2.2 |
| தனியார் | 0.9 | 1.0 | 1.0 | 1.0 | 0.8 | 1.1 | 0.7 |
| கூட்டு | 1.7 | 1.6 | 1.5 | 1.7 | 1.5 | 1.5 | 1.5 |
| சொத்துக்கள் மீதான வரிகள் | 1.0 | 0.8 | 0.7 | 0.8 | 0.7 | 0.8 | 0.8 |
| மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | 0.8 | 0.5 | 0.2 | 0.1 | 0.0 | 0.2 | 0.0 |
| உள்நாட்டு பொருட்கள் பணிகள் மீதான வரிகள் | 8.6 | 9.0 | 9.6 | 9.8 | 11.0 | 10.7 | 10.4 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி | 5.8 | 5.7 | 5.9 | 5.6 | 5.9 | 5.5 | 5.2 |
| தயாரிப்பு | 2.1 | 1.9 | 1.8 | 1.6 | 1.7 | 1.5 | 1.3 |
| தயாரிப்பல்லாத | 0.8 | 0.8 | 1.0 | 1.1 | 1.2 | 1.1 | 1.1 |
| இறக்குமதிகள் | 2.8 | 2.9 | 3.1 | 2.9 | 2.9 | 2.9 | 2.9 |
| கலால் வரி | 2.8 | 2.4 | 2.3 | 2.5 | 3.1 | 2.9 | 2.8 |
| குடிவகை | 0.8 | 0.8 | 0.8 | 0.8 | 0.8 | 1.0 | 0.8 |
| புகையிலை | 1.8 | 1.3 | 1.4 | 1.4 | 1.6 | 1.3 | 1.4 |
| ஏனையவை | 0.2 | 0.3 | 0.1 | 0.4 | 0.7 | 0.7 | 0.6 |
| பாதுகாப்பு வரி | – | 0.9 | 1.3 | 1.7 | 1.7 | 2.2 | 2.1 |
| உரிமக் கட்டணங்கள் | ... | ... | ... | – | 0.3 | 0.1 | 0.3 |
| பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் | 5.3 | 5.1 | 4.2 | 3.9 | 4.4 | 3.7 | 3.7 |
| இறக்குமதிகள் | 5.0 | 4.9 | 4.2 | 3.9 | 4.4 | 3.7 | 3.7 |
| ஏற்றுமதிகள் | 0.3 | 0.2 | ... | – | – | - | - |
| தேயிலை | 0.1 | 0.1 | ... | – | – | - | - |
| இதில் பெறுமான விகிதவரி | 0.1 | 0.1 | ... | – | – | - | - |
| இறப்பர் | 0.1 | 0.1 | ... | – | – | - | - |
| தெங்கு | ... | ... | ... | – | – | - | - |
| ஏனைய ஏற்றுமதிகள் | ... | ... | ... | – | – | - | - |
| **வரியல்லா அரசிறை** | **2.2** | **2.2** | **2.5** | **1.8** | **2.4** | 2.7 | **2.0** |
| சொத்து வருவாய் | 1.6 | 1.5 | 1.6 | 1.3 | 1.5 | 1.9 | 1.3 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் | 0.1 | 0.3 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| வட்டி வருவாய் | 0.7 | 0.8 | 0.7 | 0.8 | 0.9 | 1.0 | 0.8 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை | 0.7 | 0.3 | – | – | -0.1 | - | - |
| கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் | 0.2 | 0.3 | 0.3 | 0.2 | 0.4 | 0.3 | 0.3 |
| ஏனைய வரியில்லா அரசிறை | 0.3 | 0.5 | 0.6 | 0.3 | 0.5 | 0.5 | 0.4 |
| **மொத்த அரசிறை** | **20.4** | **20.2** | **19.7** | **19.0** | **20.8** | 20.6 | **19.1** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

சனவரியிலிருந்தும் 20 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து கட்டணங்கள், விதிப்புக் கட்டணங்களிலிருந்தான அரசிறை 1994 இன் ரூ. 9,880 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 17,510 இலட்சத்திற்கு அதிகரித்தது. வதிவிட விசா, மற்றும் கடவுச் சீட்டு தொடர்பான கட்டணங்களும் விதிப்புக்கட்டணங்களும் 1995 நவெம்பரில் உயர்த்தப்பட்டன. வட்டிப் பெறுகைகள் 1994 இன் ரூ. 45,600 இலட்சத்திற்கெதிராக 1995 இல் ரூ. 69,460 இலட்சமாக விளங்கின. வாடகை, குற்றப்பணம், அபராதங்கள் போன்ற ஏனைய துணை வருமான வகைகள் முன்னைய ஆண்டினை விட சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டின. மொ. உ. உற்பத்தியில் வரியல்லா அரசிறையின் விகிதம் 1994 இன் 1.8 சதவீதத்திலிருந்து 2.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.


### வெளிநாட்டுக் கொடைகள்

1995இல் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொடைகள் ரூ. 90,280 இலட்சமாக அமைந்து 9 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இதன் விளைவாக மொ. உ. உற்பத்தி தொடர்பாக மொத்த வெளிநாட்டுக் கொடைகள் முன்னைய ஆண்டினைப் போன்றே 1995இல் 1.4 சதவீதத்தில் காணப்பட்டது. யப்பானும் அ. ஐ. நாடுகளும் மிகப்பெரும் கொடையாளர்களாக விளங்கி இலங்கைக்கான மொத்தக் கொடைகளில் 64 சதவீதத்தினை வழங்கின. மொத்தக் கொடைகளில் ரூ. 59,800 இலட்சம் அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் பேரில் இருந்தன.

## 8.4. செலவினம்

1995 இல் மொத்த அரச செலவினமும் தேறிய கடன் வழங்கலும் ரூ. 1,915,680 இலட்சமாக அமைந்து 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. எனினும் மொ. உ. உற்பத்தியின் விகிதமாக மொத்தச் செலவினம் 1994 இன் 29 சதவீதத்திலிருந்து 1995 இல் 28.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நடைமுறைச் செலவினம் ரூ. 1,460,610 இலட்சமாக விளங்கி மொத்த அரச செலவினத்தில் 76 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மிகுதி 24 சதவீதமும் மூலதனச் செலவாகவும் தேறிய கடன் வழங்கலாகவும் காணப்பட்டன. அதேவேளை, அரசின் வரவு செலவுத் திட்டத்தினூடாக நிதியிடப்பட்ட அரச முதலீடுகள் மூலதனச் செலவினத்தையும் அரச தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கலையும் உள்ளடக்கி ரூ. 519,940 இலட்சமாக விளங்கியதுடன் 1995 இன் மொ. உ. உற்பத்தியில் 7.9 சதவீதத்திற்கும் வகைகூறின.

வரைபடம் 8.3
செலவு உள்ளமைப்பு - 1990, 1995




### நடைமுறைச் செலவினம்

1995இல் நடைமுறைச் செலவினம் ரூ. 1,460,610 இலட்சமாக விளங்கி 15 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்ததுடன் மொ. உ. உற்பத்தியின் சதவீதமாக இது 1994 இன் 22.0 சதவீதத்திலிருந்து 1995 இல் 22.1 சதவீதத்திற்கு அதிகரித்தது.

அரசின் நடைமுறைச் செலவினம் இறைச் சீராக்கங்களில் கடுமையான குறுங்கால தடைகளை விளைவித்தது. அரச ஊழியர்களின் தனியாள் ஊதியங்களும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் நடைமுறைச் செலவினத்தில் மூன்றிலொரு பங்கிற்கும் கூடுதலானளவிற்கு வகைகூறியதுடன் 1995 இன் அரச அரசிறையில் ஏறத்தாழ 38

அட்டவணை 8.3

## மீள் கொடுப்பனவுகள் கழித்த செலவு கடன் வழங்கல் என்பனவற்றின் பொருளாதாரப் பகுப்பாய்வு

ப.இ. ரூபாய்களில்

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1995 தற்காலிகம் | 1996 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு** | **83,756** | **89,638** | **102,288** | **127,084** | **133,424** | **146,061** | **169,781** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவுகள் | 35,848 | 39,692 | 44,895 | 54,700 | 55,223 | 67,348 | 82,521 |
| சம்பளங்களும் கூலிகளும் | 17,985 | 20,793 | 26,332 | 29,309 | 32,900 | 36,946 | 39,978 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் | 17,863 | 18,898 | 18,563 | 25,391 | 22,323 | 31,002 | 42,543 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 22,073 | 25,940 | 30,203 | 38,031 | 37,203 | 38,226 | 44,057 |
| வெளிநாட்டு | 4,113 | 4,739 | 5,102 | 5,511 | 6,361 | 6,162 | 7,351 |
| உள்நாட்டு | 17,960 | 21,201 | 25,101 | 32,520 | 30,842 | 32,064 | 36,706 |
| நடைமுறை மாற்றல்களும் உதவு தொகைகளும் | 25,835 | 24,007 | 27,190 | 34,353 | 41,480 | 40,487 | 48,103 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 1,743 | 1,428 | 1,571 | 2,634 | 7,793 | 7,841 | 6,308 |
| அரச நிறுவனங்களுக்கு | 1,405 | 1,649 | 2,031 | 1,976 | 2,343 | 2,182 | 2,739 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 1,050 | 1,111 | 896 | 1,307 | 1,250 | 1,157 | 1,512 |
| குடியிருப்புகளும் ஏனைய துறைகளும் | 21,637 | 19,819 | 22,335 | 28,263 | 30,093 | 29,307 | 37,545 |
| உணவு முத்திரை, உணவு உதவு தொகை போன்றன | 4,023 | 4,466 | 4,580 | 4,654 | 4,750 | 3,343 | 1,081 |
| சனசக்தி | 3,407 | 3,098 | 3,685 | 5,369 | 4,600 | 5,759 | 11,794 |
| ஓய்வூதியங்கள் | 8,832 | 8,099 | 10,516 | 13,271 | 14,894 | 15,057 | 17,359 |
| வளமாக்கி உதவு தொகை | – | – | – | 630 | 1,500 | 1,345 | 1,500 |
| ஏனைய | 5,375 | 4,156 | 3,554 | 4,339 | 4,349 | 3,803 | 5,811 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு | – | – | – | – | -482 | - | -4"900 |
| **மூலதனச் செலவு** | **25,305** | **24,949** | **33,662** | **30,391** | **43,623** | **40,907** | **43,203** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 14,072 | 12,604 | 19,719 | 16,747 | 25,428 | 21,908 | 27,313 |
| மூலதன மாற்றல்கள் | 11,233 | 12,345 | 13,943 | 13,644 | 18,194 | 18,998 | 18,290 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 2,993 | 4,610 | 4,311 | 4,246 | 5,230 | 7,614(அ) | 5,123 |
| அரச நிறுவனங்களுக்கு | 6,990 | 6,663 | 8,551 | 8,433 | 11,803 | 10,446 | 12,119 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 950 | 1,028 | 1,036 | 914 | 1,112 | 921 | 1,000 |
| ஏனையவை | 300 | 44 | 45 | 51 | 49 | 17 | 49 |
| **மீள்கொடுப்பனவுகள் கழித்த கடன் வழங்கல்** | **10,467** | **2,386** | **4,510** | **10,293** | **10,503** | 4,601 | -4,499 |
| முற்பணக் கணக்குகள் | 1,819 | -150 | 410 | 2,462 | 500 | -1,580 | 500 |
| கடன் வழங்கல் | 7,286 | 6,246 | 6,265 | 10,064 | 13,761 | 11,087 | 15,313 |
| மீளமைப்புச் செலவு | 3,335 | 1,750 | 1,465 | 3,739 | 3,392 | 3,191 | 4,792 |
| தனியார்மயமாக்கலிற் பெற்றபேறு | -841 | -2,850 | -1,200 | -2,996 | -4,500 | -3,001 | 21,000 |
| கடன் மீள் கொடுப்பனவுகள் | -1,132 | -2,610 | -2,430 | -2,976 | -2,650 | -5,097(ஆ) | -4,104 |
| **மொத்த செலவும் தேறிய கடன் வழங்கலும்** | **119,528** | **116,973** | **140,460** | **167,768** | **187,549** | **191,568** | **208,485** |

(தொடரும்)

அட்டவணை 8.3 (தொடர்ச்சி)

## மீள் கொடுப்பனவுகள் கழித்த செலவு கடன் வழங்கல் என்பனவற்றின் பொருளாதாரப் பகுப்பாய்வு
(மொ.உ.உ. இன் சதவீதமாக)

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1995 தற்காலிகம் | 1996 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு** | **22.5** | **21.1** | **20.5** | **22.0** | **20.2** | **22.1** | **21.9** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவுகள் | 9.6 | 9.3 | 9.0 | 9.5 | 8.4 | 10.2 | 10.6 |
| சம்பளங்களும் கூலிகளும் | 4.8 | 4.9 | 5.3 | 5.1 | 5.0 | 5.5 | 5.2 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் | 4.8 | 4.4 | 3.7 | 4.4 | 3.4 | 4.7 | 5.5 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 5.9 | 6.1 | 6.0 | 6.6 | 5.6 | 5.8 | 5.7 |
| வெளிநாட்டு | 1.1 | 1.1 | 1.0 | 1.0 | 1.0 | 0.9 | 0.9 |
| உள்நாட்டு | 4.8 | 5.0 | 5.0 | 5.6 | 4.7 | 4.8 | 4.7 |
| நடைமுறை மாற்றல்களும் உதவு தொகைகளும் | 6.9 | 5.6 | 5.4 | 5.9 | 6.3 | 6.1 | 6.2 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 0.5 | 0.3 | 0.3 | 0.5 | 1.2 | 1.2 | 0.8 |
| அரச நிறுவனங்களுக்கு | 0.4 | 0.4 | 0.4 | 0.3 | 0.4 | 0.3 | 0.4 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 0.3 | 0.3 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| குடியிருப்புகளும் ஏனைய துறைகளும் | 5.8 | 4.7 | 4.5 | 4.9 | 4.6 | 4.4 | 4.8 |
| உணவு முத்திரை, உணவு உதவு தொகை போன்றன | 1.1 | 1.0 | 0.9 | 0.8 | 0.7 | 0.5 | 0.1 |
| சனசக்தி | 0.9 | 0.7 | 0.7 | 0.9 | 0.7 | 0.9 | 1.5 |
| ஓய்வூதியங்கள் | 2.4 | 1.9 | 2.1 | 2.3 | 2.3 | 2.3 | 2.2 |
| வளமாக்கி உதவு தொகை | – | – | – | 0.1 | 0.2 | 0.2 | 0.2 |
| ஏனையவை | 1.4 | 1.0 | 0.8 | 0.8 | 0.7 | 0.6 | 0.7 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு | - | - | - | - | -0.1 | - | -0.6 |
| **மூலதனச் செலவு** | **6.8** | **5.9** | **6.7** | **5.3** | **6.6** | **6.2** | **5.6** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 3.0 | 3.0 | 3.9 | 2.9 | 3.9 | 3.3 | 3.5 |
| மூலதன மாற்றல்கள் | 3.0 | 2.9 | 2.8 | 2.4 | 2.8 | 2.9 | 2.4 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 0.8 | 1.1 | 0.9 | 0.7 | 0.8 | 1.2 | 0.7 |
| அரச நிறுவனங்களுக்கு | 1.9 | 1.6 | 1.7 | 1.5 | 1.8 | 1.6 | 1.6 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 0.3 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.1 | 0.1 |
| ஏனையவை | 0.1 | – | – | – | – | - | - |
| **மீள் கொடுப்பனவுகள் கழித்த கடன் வழங்கல்** | **2.8** | **0.6** | **0.9** | **1.8** | **1.6** | **0.7** | **-0.6** |
| இதில் முற்பணக் கணக்குகள் | 0.5 | ... | 0.1 | ... | | | |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **32.1** | **27.5** | **28.1** | **29.0** | **28.4** | **28.9** | **26.9** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) திறைசேரி ஏடுகளில் காணப்பட்ட கடன் நிலுவைகளைத் தீர்ப்பதற்காக கப்பற் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட ரூபா 23,950 இலட்சத்தையும் உள்ளடக்கும்.

(ஆ) கப்பற் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூ. 23,950 இலட்சம் கொண்ட மீள் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கும்.

சதவீதத்தினையும் ஈர்த்துக்கொண்டது. கடந்த அண்மைக் காலத்தில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட உயர்ந்த வரவு செலவுத் திட்டக்குறைகளைத் தொடர்ந்து அரச படுகடன் மொ. உ. உற்பத்தியின் 95 சதவீதத்திற்கு உயர்வடைந்ததுடன் வட்டிக் கொடுப்பனவு நடைமுறைச் செலவினத்தில் நான்கிலோரு பங்கிற்கு வகைகூறி அரச அரசிறையில் ஏறத்தாழ 28 சதவீதத்தினைப் பயன்படுத்திக்கொண்டது. தனியார் ஊதியங்கள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள், பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றின் மீதான உயர்ந்த செலவுகளின் பின்னணியில் வரவு செலவுத் திட்டக் குறையைக் குறைப்பதனை நோக்கிய இறைச் சீராக்கங்களின் சுமையானது அரச சொத்துக்கள் மற்றும் அரச முதலீடுகளின் பேணல் போன்ற முக்கிய அரச செலவின நிகழ்ச்சித் திட்டங்களின் மீது ஏற்பட்டது. இதற்கும் புறம்பாக, உயர்ந்த அரசிறை முயற்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

1994 இல் அவ்வப்போது வழங்கப்பட்ட கூலி அதிகரிப்புக்களினதும் 1995 இல் புதிய சம்பள அளவுகளுடன் ஆசிரியர்கள் பணி நிறுவப்பட்டமையும் நிரம்பிய தாக்கத்தினை ஏற்படுத்திமையின் காரணமாக அரசின் கூலிப் பட்டியல் ரூ. 363,460 இலட்சமாக விளங்கி இவ்வாண்டில் ரூ. 70,370 இலட்சம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. ஆசிரியர் பணிகளுக்கான புதிய சம்பள அளவுகளின் நடைமுறைப்படுத்தல் தாக்கம் ஏறத்தாழ ரூ. 30,000 இலட்சமாக அமைந்தது. அத்துடன் அரச ஊழியர்களின் தெரிந்தெடுக்கப்பட்ட வகையினர்களின் சம்பள முரண்பாடுகள் அவ்வப்போதைய அடிப்படையில் திருத்தப்பட்டமை ஏறத்தாழ 650 பட்டதாரி பயிற்சியாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டமை, 1994 இல் பல்வேறு அரச திணைக்களங்களிலுள்ள அமைய ஊழியர்கள் நிரந்தர பதவி வழங்கப்பட்டமை என்பனவும் 1995 இல் கூலிப்பட்டியல் உயர்வடைய உதவின. சம்பளங்கள், கூலிகள் மீதான செலவினம் நடைமுறைச் செலவில் நான்கிலொரு பங்காயமைந்து 1995 இன் மொ. உ. உற்பத்தியில் ஏறத்தாழ 5.5 சதவீதமாகக் காணப்பட்டது.

1995இல் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ரூ. 150,570 இலட்சமாக விளங்கி 13 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இவ்வதிகரிப்பிற்கு ஓய்வூதியக்காரர்களுக்கு நிலுவையிலிருந்த ரூ. 260 வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்பட்டமையும் ஓரளவுக்குக் காரணமாகும். ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கையும் 1994 இன் ஏறத்தாழ 330,000 இலிருந்து 1993 இல் 342,000க்கு உயர்ந்தது.

மின்வலு, தொடர்பூட்டல், பயணம், அலுவலக தேவைகளின் வழங்கல்கள் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் போன்றவற்றை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவின் பொருட்டு அரசிற்கு ஏற்பட்ட செலவினம் ரூ. 310,020 இலட்சத்திற்கு அதிகரித்து 1994 இனைவிட 22 சதவீத அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. இச் செலவுகளின் பேரில் ஏற்பட்ட உயர்விற்கு 1995 ஏப்பிறலில் மோதல்கள் மீண்டும் ஆரம்பமானதைத் தொடர்ந்து பாதுகாப்புச் செலவினம் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். இவ்வகைச் செலவினத்தில் பாதுகாப்புத் தொடர்பான பங்கு ரூ. 224,600 இலட்சத்திற்கு அல்லது 72 சதவீதத்திற்கு வகைகூறி, இறைத் தொழிற்பாடுகளின் மீது பாதுகாப்புச் செலவினத்தின் பெரும் சுமையைப் பிரதிபலித்தது. எனினும், தொழிற்பாட்டுச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட சிக்கன வழிமுறைகளின் காரணமாக ஏனைய பொருட்கள் பணிகள் மீதான பாதுகாப்பு அல்லா செலவினத்தின் மீதான செலவு 1994 இன் ரூ.101,720 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 85,420 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 382,260 இலட்சமாக அல்லது மொ. உ. உற்பத்தியில் 5.8 சதவீதமாக விளங்கின. உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 1994 இன் ரூ. 325,200 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 320,640 இலட்சத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. திறைசேரி உண்டியல் மீதான வட்டிகள் 25 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு, 1993 இல் நிலவிய உயர்ந்தவீத வட்டிக்கு எதிராக 1994 இலும் 1995 இன் முதல் நான்கு மாதக்காலப்பகுதியிலும் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு தாழ்ந்த திறைசேரி உண்டியல் வீதங்களின் காலங்கடந்த தாக்கமே காரணமாகும். மாறாக ரூபாக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1994 இன் ரூ. 138,080 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 181,170 இலட்சத்திற்கு உயர்வடைந்து 1994 யூலையிலிருந்து 1995 யூன் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட உயர்ந்த கடன்பாடுகளின் தாக்கத்தைப் பிரதிபலித்து மொத்தமாக ரூ. 401,680 இலட்சமாக விளங்கியது. வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டி 1994 இன் ரூ. 55,110 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 61,620 இலட்சத்திற்கு அதிகரித்தது. எனினும் வெளிநாட்டுப் படுகடன்கள் சலுகை ரீதியான தன்மையைக் கொண்டிருந்தமையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வெளிநாட்டுக் கடன்கள் மீதான சராசரி வட்டி வீதம் முன்னைய ஆண்டினைப் போன்றே ஏறத்தாழ 1.8

சதவீதமாக விளங்கின.

அரச கூட்டுத்தாபனங்கள், மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்கள் ரூ. 46,100 இலட்சத்திலிருந்து ரூ. 100,230 இலட்சத்திற்கு அதிகரித்தமைக்கு மாவிற்கான உதவிக்கொடுப்பனவுச் செலவினை ஈடுசெய்வதற்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்கப்பட்ட ரூ. 50,000 இலட்ச கொடுப்பனவே காரணமாகும். மா உதவிக்கொடுப்பனவின் மீதான உயர்ந்த செலவு, மாவின் அதிகரித்த நுகர்வானது கோதுமைத் தானியத்தின் (கொகவிலை) சராசரி விலை 1994 இல் மெற்றிக் தொன்னொன்றிற்கு ஐ. அ. டொலர் 136 இலிருந்து 1995 இல் ஐ. அ. டொலர் 185 இற்கு மிகக் கூடுதலாக உயர்ந்தமையுடன் சேர்ந்து கொண்டதன் விளைவேயாகும். கோதுமைமாவின் நிருவகிக்கப்பட்ட விலை கி. கிறாமிற்கு ரூ. 6.65 இலிருந்து கி.கிறாமுக்கு ரூ. 11.15 இற்கு அதிகரிக்கப்பட்டபோதும் 1994 ஓகத்தில் கி.கிறாமிற்கு ரூ. 0.22 ஆக இருந்த கோதுமை மா உதவிக்கொடுப்பனவு 1995 இல் கடுமையாக அதிகரித்தது. சராசரியாக இவ்வாண்டில் கோதுமை மா உதவிக்கொடுப்பனவு கி. கிறாமிற்கு ரூ. 9.02 ஆக விளங்கியது. உயர்ந்த விலை உதவிக்கொடுப்பனவை பிரதிபலிக்கின்ற விதத்தில் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மா வழங்கல்கள் 10 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் மொத்த கோதுமை இறக்குமதிகள் 22 சதவீதத்தினால் அதிகரித்தன.

இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்புக்களின் பேரிலான மாற்றல் கொடுப்பனவுகள் பெரும்பாலும் மாற்றமின்றியிருந்த வேளையில் அஞ்சல் திணைக்களத்தின் தொழிற்பாட்டிழப்புக்கள் 1995 இல் அஞ்சல் வீதங்கள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக வீழ்ச்சியடைந்தன. புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்புக்கள் தொடர்ந்தும் அப்படியே இருந்தமைக்கு பயணக் கட்டணங்களின் சீராக்கம் செய்யப்பட்டமையே காரணமாகும். உணவு மற்றும் மண்ணெண்ணெய் முத்திரைகள், சனசக்தி, சமூர்த்தி நிகழ்ச்சித் திட்டம். இலவச பள்ளிச் சீருடை, இலவச நண்பகல் உணவு, பருவகால சீட்டு, இலவச பாடப் புத்தகங்கள், குழந்தைகள் பால் உணவு உதவுதொகை மற்றும் திறிபோசா கவனிப்பு போன்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் மீதான நலன்புரிச் செலவு ரூ. 105,800 இலட்சமாக அல்லது மொ. உ. உற்பத்தியில் 1.6 சதவீதமாக இருந்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அவசர நிவாரணங்கள், இடம்பெயர்ந்தவர்களுக்கான புத்தாக்கம் என்பனவற்றின் மீதான செலவினம் ரூ. 21,060 இலட்சமாக இருந்தது. 1994 ஒற்றோபரில் அறிமுகப்படுத்தப்பட்ட வளமாக்கி உதவிக்கொடுப்பனவு ரூ. 13,450 இலட்சமாக விளங்கியது. எனினும், சனசக்தி உணவு மற்றும் மண்ணெண்ணெய் முத்திரை, பள்ளிக்கூட நண்பகல் உணவு நிகழ்ச்சி திட்டம் என்பன சமூர்த்தி நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் ஒன்று திரட்டப்பட்டன.

தொழிற்பாட்டு அடிப்படையின்படி, கல்வி, நலத்துறை, நலன்புரி, சமூகப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய சமூகப் பணிகள் மீதான நடைமுறைச் செலவினம் 1995 இல் ரூ. 576,480 இலட்சத்திற்கு 21 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மொத்த நடைமுறைச் செலவினத்தில் ஏறத்தாழ 40 சத வீதத்திற்கு வகைகூறியது. மொ. உ. உற்பத்தியின் பங்கைப் பார்க்கையில் 1994 இன் 8.2 சதவீதத்திலிருந்து 1995 இல் 8.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. கல்வி மீதான செலவினம் முன்னைய ஆண்டினை விட 6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு1995 இல் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர்களின் சம்பளத்திருத்தங்களே பெருமளவு காரணமாக இருந்தவேளையில் நலத்துறை மீதான செலவினம் 1994 இன் ரூ.76,660 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1995இல் ரூ.88,180 இலட்சத்திற்கு அதிகரித்தது.

அரச நிறுவனங்களினால் முக்கியமாக வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம், மீன்பிடி, தயாரிப்பு மற்றும் சுரங்கமகழ்தல், வலு மற்றும் நீர்வழங்கல் போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல், வர்த்தகம் மற்றும் வாணிபம் என்பனவற்றில் ஏற்பட்ட தொழிற்பாட்டுச் செலவினை உள்ளடக்கிய பொருளாதாரப் பணிகள் மீதான நடைமுறைச் செலவின் ரூ.80,780 இலட்சமாக விளங்கி 1994 இல் பயன்படுத்தப்பட்ட தொகையைவிட 30 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இதற்கு வளமாக்கி உதவுதொகையின் முழு ஆண்டிற்குமான தாக்கமே பெருமளவு காரணமாகும்.

பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு மீதான நடைமுறைச் செலவினம் ரூ. 399,860 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினை விட 31 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இது, 1994 இன் ரூ. 258,070 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 334,240 இலட்சத்திற்கு அதிகரித்த பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளின் மீதான அதிகரித்த செலவினத்தில் முழுமையாகப் பிரதிபலிக்கப்பட்டது. இச் செலவின் மூலங்கள் மொத்தச் செலவினத்தில் ஐந்திலொரு பங்கிற்கும் மொ. உ. உற்பத்தியில் 5.0 சதவீதத்திற்கும் வகைகூறின.

## அட்டவணை 8.4

## செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1995 தற்காலிகம் | 1996 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு** | | | | | | | |
| பொது அரச பணிகள் | 19,811 | 24,453 | 27,564 | 30,444 | 31,049 | 39,986 | 48,400 |
| பொது நிருவாகம் | 5,612 | 7,099 | 7,405 | 4,637 | 8,182 | 6,562 | 16,202 |
| பாதுகாப்பு | 10,317 | 12,876 | 15,413 | 19,415 | 16,750 | 27,284 | 25,180 |
| பொது ஒழுக்கமும் பாதுகாப்பும் | 3,882 | 4,478 | 4,746 | 6,392 | 6,118 | 6,140 | 7,018 |
| சமூகப் பணிகள் | 31,594 | 32,700 | 37,477 | 47,656 | 54,932 | 57,648 | 63,194 |
| கல்வி | 7,951 | 10,533 | 11,225 | 14,836 | 14,732 | 15,784 | 13,231 |
| நலத்துறை | 4,110 | 4,518 | 5,711 | 7,666 | 8,627 | 8,818 | 10,566 |
| நலன்புரி | 19,266 | 17,378 | 20,255 | 24,560 | 30,826 | 32,106 | 38,550 |
| வீடமைப்பு | – | – | – | – | – | – | – |
| சமூகப் பணிகள் | 267 | 271 | 285 | 593 | 747 | 941 | 847 |
| பொருளாதாரப் பணிகள் | 3,925 | 3,834 | 4,328 | 6,195 | 7,241 | 8,078 | 8,169 |
| வேளாண்மையும் நீர்ப்பாசனமும் | 912 | 1,398 | 1,483 | 2,506 | 2,968 | 3,826 | 3,448 |
| கடற்றொழில் | 98 | 68 | 107 | 99 | 133 | 105 | 178 |
| தயாரிப்பும் சுரங்கமகழ்தலும் | 231 | 349 | 403 | 351 | 651 | 252 | 702 |
| வலுவும் நீர்வழங்கலும் | 659 | 133 | 93 | 518 | 997 | 990 | 810 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 1,308 | 1,208 | 1,346 | 2,024 | 1,602 | 2,014 | 1,974 |
| வியாபாரமும் வர்த்தகமும் | 137 | 232 | 203 | 72 | 105 | 172 | 287 |
| ஏனையவை | 580 | 446 | 693 | 625 | 785 | 719 | 771 |
| ஏனையவை | 28,425 | 28,652 | 32,920 | 42,789 | 40,684 | 40,350 | 54,918 |
| இதில் வட்டி | 22,073 | 25,940 | 30,203 | 38,031 | 37,203 | 38,226 | 44,057 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு | – | – | – | – | -482 | – | -4"900 |
| **மொத்த நடைமுறைச் செலவு** | **83,756** | **89,639** | **102,288** | **127,084** | **133,424** | **146,061** | **169,781** |
| **மூலதனச் செலவும் கடன் வழங்கலும்** | | | | | | | |
| பொது அரச பணிகள் | 2,422 | 1,970 | 4,085 | 2,390 | 5,006 | 5,096 | 4,335 |
| பொது நிருவாகம் | 1,680 | 1,256 | 3,463 | 1,753 | 3,626 | 3,962 | 3,226 |
| பொது ஒழுக்கமும் பாதுகாப்பும் | 742 | 714 | 622 | 637 | 1,380 | 1,134 | 1,109 |
| சமூகப் பணிகள் | 2,964 | 6,137 | 6,075 | 7,677 | 11,140 | 9,854 | 12,363 |
| கல்வி | 1,178 | 2,008 | 2,845 | 2,877 | 4,126 | 3,124 | 4,418 |
| நலத்துறை | 1,119 | 2,023 | 1,353 | 1,519 | 3,075 | 2,134 | 3,661 |
| நலன்புரி | 15 | 1,191 | 1,084 | 1,681 | 289 | 1,690 | 1,145 |
| வீடமைப்பு | 535 | 767 | 604 | 802 | 2,099 | 1,610 | 1,256 |
| சமூகப் பணிகள் | 117 | 148 | 189 | 789 | 1,551 | 1,297 | 1,882 |
| பொருளாதாரப் பணிகள் | 26,022 | 20,444 | 29,600 | 29,304 | 40,148 | 36,106 | 43,170 |
| வேளாண்மையும் நீர்ப்பாசனமும் | 6,071 | 5,890 | 5,682 | 5,179 | 6,171 | 6,060 | 6,525 |
| இதில் மகாவலிச் செயற்றிட்டம் | 2,410 | 2,670 | 2,810 | 2,598 | 2,764 | 3,090 | 2,133 |
| கடற்றொழில் | 181 | 175 | 124 | 368 | 189 | 361 | 542 |
| தயாரிப்பும்சுரங்கமகழ்தலும் | 171 | 184 | 1,471 | 22 | 273 | 250 | 1,019 |
| வலுவும் நீர்வழங்கலும் | 6,181 | 5,527 | 4,728 | 5,518 | 7,884 | 5,003 | 6,914 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 10,921 | 4,363 | 10,165 | 14,522 | 18,639 | 18,888 | 19,696 |
| வியாபாரமும் வர்த்தகமும் | 218 | 365 | 364 | 182 | 427 | 20 | 353 |
| ஏனையவை | 2,279 | 3,940 | 7,066 | 3,513 | 6,565 | 5,524 | 8,121 |
| ஏனையவை | 1,250 | 1,072 | 1,081 | 1,084 | 1,161 | 939 | 1,049 |
| **மொத்த மூலதனச் செலவும் கடன் வழங்கலும்** | **32,658** | **29,622** | **40,841** | **40,455** | **57,455** | **51,994** | **58,516** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

### அரச முதலீடு

மூலதனச் செலவினத்தின் பேரிலான ரூ. 409,070 இலட்சத்தையும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கடன் வழங்கல் மீதான ரூ. 110,870 இலட்சத்தையும் உள்ளடக்கிய அரச முதலீடுகள் ரூ. 519,940 இலட்சமாக விளங்கி அல்லது மொ.உ.உற்பத்தியில் 7.9 சதவீதமாக விளங்கின. நிலையான சொத்துக்களின் கட்டுமான மற்றும் அபிவிருத்திக்கான அரச மூலதன நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அமைச்சினாலும் திணைக்களங்களினாலும் நேரடியாக ஏற்படுத்தப்பட்ட மூலதனச் செலவு 1994 இன் ரூ.167,470 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1995 இல் ரூ. 219,080 இலட்சமாக விளங்கியது. அரச கூட்டுத்தாபனங்களினாலும், நியதிச்சபைகளினாலும் பொறுப்பேற்கப்பட்ட அரச முதலீட்டுச் செயற்றிட்டங்கள் ரூ. 291,470 இலட்சத்தினைப் பயன்படுத்தி முன்னைய ஆண்டைவிட 28 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. இந்நிதிகளில் ரூ. 194,760 இலட்சம் இலங்கைத்துறைமுக மேலாண்மைச் சபையினாலும் (ரூ. 59,430 இலட்சம்) வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபையினாலும் (ரூ. 49,270 இலட்சம்) தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையினாலும் (ரூ. 31,560 இலட்சம்) இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையினாலும் (ரூ. 30,900 இலட்சம்) இலங்கை ரெலிகொம்மினாலும் (ரூ. 23,600 இலட்சம்) பயன்படுத்தப்பட்டன.

கடன் வழங்கலூடாக திரட்டப்பட்ட மூலவளங்களின் வாயிலாக அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஏற்படுத்தப்பட்ட மூலதனச் செலவினம் ரூ. 110,870 இலட்சமாக அமைந்து 1995 இற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளான ரூ. 137,610 இலட்சத்தினைவிட குறைவாக இருந்தது. இலங்கை மின்சபையின் வலுப் பங்கீடு மற்றும் மின் கடத்தி செயற்றிட்டத்திற்கான வெளிநாட்டு உதவியினால் முழுமையாக நிதியிடப்படவுள்ள ரூ. 43,350 இலட்சம் கொண்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கில் ரூ. 14,820 இலட்சம் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. இதேபோன்று தொலைத் தொடர்பு அபிவிருத்திக்கான செயற்றிட்டத்திற்கான ரூ. 35,010 இலட்சத்தில் சிறிலங்கா ரெலிகொம் ரூ. 23,600 இலட்சத்தினை மட்டுமே பயன்படுத்தியது. அத்தகைய குறைபாட்டுக்கு நடைமுறைப்படுத்தல், நடைமுறைத் தாமதங்களுமே முக்கிய காரணமாகும். எனினும், துறைமுக வசதிகளின் அபிவிருத்திக்காக பெரும்பாலும் வெளிநாட்டு நிதியிடலைக் கொண்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கினைவிட கூடுதலாக ரூ. 59,430 இலட்சத்தினைப் பயன்படுத்திக்கொண்டது.

தொழிற்பாட்டு பகுப்பு நியதிகளின்படி, பொருளாதார பணிகளுக்கான அரச முதலீடு ரூ.361,060 இலட்சமாக (மொ. உ. உற்பத்தியில் 5.5 சத வீதம்) விளங்கியது. இத்தொகையில் ரூ. 188,880 இலட்சம் அல்லது 52 சதவீதம் போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துறையின் பேரிலானதாக இருந்ததுடன் இதில் ரூ. 49,270 இலட்சம் வீதி வலையமைப்பு அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்பட்டது. இலங்கை துறைமுக மேலாண்மைச் சபையும், சிறிலங்கா ரெலிகொம்மும் முறையே ரூ. 59,430 இலட்சத்தினையும், ரூ. 23,600 இலட்சத்தினையும் பயன்படுத்திக்கொண்டன. வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத்தின் மீது செலவிடப்பட்ட ரூ.60,600 இலட்சம், 51 சதவீதம் இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையினால் பயன்படுத்தப்பட்டது. வலு மற்றும் நீர் வழங்கல் மீதான அரச முதலீடு ரூ. 50,030 இலட்சமாக அமைந்ததுடன், இது இத்துறையின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட ஆரம்ப மூலவளங்களிலும் பார்க்க 37 சதவீதம் குறைவானதாகும். இக்குறைப்பிற்கு தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மின்சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் குறைந்த பயன்பாடுகளே முக்கிய காரணமாகும். 1995 இல் சமூகப் பணிகளின் பேரிலான மூலதனச் செலவினம் ரூ. 98,540 இலட்சத்திற்கு 28 சதவீதத்தினால் அதிகரித்தன. சமூகப் பணிகளிலுள்ள ஐந்து துறைகளில் நான்கு துறைகளான கல்வி, நலத்துறை, வீடமைப்பு மற்றும் சமூகப் பணிகள் அரச முதலீடுகளில் கணிசமான அதிகரிப்புக்களை கொண்டிருந்தன. நலன்புரிப் பணிகள் சிறிதளவு அதிகரிப்பினை மட்டும் காட்டின. மொ. உ. உற்பத்தியின் விகிதமாக சமூகப் பணிகள் மீதான அரச முதலீடுகள் 1994 இன் 1.3 சதவீதத்திலிருந்து 1995 இல் 1.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. பொதுநிருவாகத்தின் மீதான மொத்த மூலதன முதலீடு ரூ. 50,960 இலட்சமாக அமைந்து மொ. உ. உற்பத்தியில் 0.8 சதவீதத்தினைக் கொண்டிருந்தது.


### 8.5. அரச தொழில் முயற்சி சீரமைப்புக்கள்

அரச தொழில் முயற்சிகள் சீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் ரூ. 30,010 இலட்சத்தினை உருவாக்கியது. வெளிநாட்டு மூலதனத்தையும் தொழில்நுட்பத்தையும் கவர்கின்ற கொழும்பு வாயுக் கம்பனி போன்ற ஒருசில முக்கிய வர்த்தக தொழில் முயற்சிகள் உரிமை மாற்றுவதனை அரசாங்கம் நிறைவு செய்தது. இக்கொடுக்கல் வாங்கல்களின் மூலம் ஐ.அ. டொலர் 370 இலட்சம் (ரூ. 19,980 இலட்சம்) மொத்த அரசிறையாகப் பெறப்பட்டது. மேலதிகமாக இவ்வாண்டில் மூலதன அபிவிருத்தி முதலீட்டுக்

கம்பனி மற்றும் பல பெருந்தோட்டக் கம்பனிகளும் உரிமைமாற்றப்பட்டன. அரச தொழில் முயற்சி சீரமைப்பு ஆணைக்குழு, எயர்லங்கா, இலங்கை ரெலிகொம், வரையறுக்கப்பட்ட ஒறியன்ட் லங்கா, செவனகல சீனி, லங்கா எலக்றிக் கம்பனி, மற்றும் பல ஏனைய சிறு தொழில் முயற்சிகளை மீளமைக்கும் வேலைகளைத் தொடங்கியது. முன்னைய கடன் வழங்கலிலிருந்து அரசினால் மீளப்பெறப்பட்ட தொகை ரூ. 50,970 இலட்சமாக அமைந்ததுடன் இதில் ரூ. 14,200 இலட்சம் இலங்கை மின்சபையினால் செலுத்தப்பட்டதாகும். மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக இரு அரச வங்கிகளினாலும் வைத்திருக்கப்பட்ட அரச பிணைகளின் மீதான ஆண்டு வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 28,910 இலட்சமாக விளங்கின.

### 8.6. வரவு செலவுத் திட்டக் குறையை நிதியிடல்

1995இல் வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளின்பின்னர்) ரூ. 462,820 இலட்சமாக அமைந்து 1994 இனைவிட 6 சதவீதம் அல்லது ரூ. 31,910 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. குறைப்பை நிதியிடுவதற்காகக் கிடைக்கத்தக்கதாயிருந்த மொத்த வெளிநாட்டு மூலவளங்கள் ரூ. 207,870 இலட்சமாக அமைந்து 7 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. எனினும், வெளிநாட்டு மூலகங்களிலிருந்தான தேறிய கடன்பாடுகள் ரூ. 123,100 இலட்சமாக அமைந்தமைக்கு ரூ. 84,770 இலட்சம் கொண்ட மீள் கொடுப்பனவுகளே காரணமாகும். மேலும் மொத்த வெளிநாட்டுக் கடன்பாடுகள் வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திலும் பார்க்க 21 சதவீதம் குறைவாக இருந்தமைக்கு வெளிநாட்டு நிதியிடலுடனான குறிப்பாக வலு மற்றும் தொலைத் தொடர்பூட்டல் செயற்றிட்டங்களின் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலில் காணப்பட்ட தாமதங்களே



வரைபடம் 8.4
பற்றாக்குறையை நிதியிடல்

காரணமென்பது கவனிக்கத்தக்கதாகும். மொ. உ. உற்பத்தியின் விகிதமாக தேறிய வெளிநாட்டுக்கடன்பாடுகள் 1995 இல் 1.9 சதவீதமாக விளங்கின.

வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக ரூபாக் கடன்கள், திறைசேரி உண்டியல் மற்றும் நிருவாக ஒழுங்குகள் என்பனவற்றின் வழங்கலூடாக வங்கியல்லா உள்நாட்டு மூலகங்களிலிருந்தான மொத்தக் கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 520,510 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 550,750 இலட்சமாக விளங்கின. அரசாங்கம் ரூபாப் பிணைகளின் வழங்கலூடாக ரூ. 467,150 இலட்சம் கொண்ட மொத்தக் கடன்பாடுகளைத் திரட்டியது. 1994 இல் இம் மூலங்களிலிருந்தான கடன்பாடுகள் ரூ. 468,780 இலட்சமாக இருந்தன. எனினும் ரூ. 263,290 இலட்சம் கொண்ட மீள்கொடுப்பனவுகளின் காரணமாக ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக கடன்பாடுகள் 1994 இன் ரூ. 319, 220 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 203,860 இலட்சமாக விளங்கின.

முன்னைய ஆண்டினைப் போன்றே ஊழியர் சேமநிதியம் தொடர்ந்தும் ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கான முக்கிய உதவுநராக விளங்கியது. 1995 இல் ரூபாக் கடன்களுக்கு இம் மூலத்திலிருந்தான உதவுதொகைகள் ரூ. 314,200 இலட்சமாக விளங்கி 24 சதவீத அல்லது ரூ. 60,680 இலட்ச அதிகரிப்பினைக் காட்டியது. மாறாக உயர்ந்த விலைகளின் காரணமாக ரூபாக் கடன்களிலிருந்து திறைசேரி உண்டியல்களுக்கு மாறியமையின் விளைவாக ரூபாக்கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு தேசிய சேமிப்பு வங்கியின் மொத்த உதவுதொகை 1994 இன் ரூ. 195,950 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 144,290 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், 1995 இல் தே. சே. வங்கி ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கான மொத்த உதவுதொகையில் 30 சத வீதத்திற்கு மேலான பங்கிற்கு வகைகூறியது. 1995இல் ரூபாக் கடன்களின் வட்டிவீதம் 14 சதவீதமாக இருந்தவேளையில் ஓராண்டு முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் வட்டிவீதம் 13.68 – 20.54 சதவீதத்திற்கிடையில் தளம்பலுற்றன. திறைசேரி உண்டியல் மூலமாக பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள் ரூ. 97,550 இலட்சமாக விளங்கின. வரவு செலவுத் திட்ட குறையை நிதியிடுவதில், அரசாங்கமும் திறைசேரி வைப்புச் சான்றிதழ்களூடாக ரூ. 530 இலட்சத்தையும் நிருவாக ஒழுங்குகளிலிருந்து ரூ. 5,480 இலட்சத்தையும் பயன்படுத்தியது.

ரூ. 280,690 இலட்சம் கொண்ட மிகைக் கொடுப்பனவுகளின் காரணமாக வங்கியல்லா உள்நாட்டு மூலங்களிலிருந்தான தேறிய உள்நாட்டுக் கடன்பாடுகளில் 1994 இன் ரூ. 372,050 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1995 இல் ரூ. 263,590 இலட்சமாக விளங்கின. இதன் விளைவாக மொ. உ. உற்பத்தி தொடர்பாக உள்நாட்டு வங்கியல்லா நிதியிடல் 1994 இன் 6.3 சத வீதத்திலிருந்து 1995 இல் 4.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக மொ. உ. உற்பத்தியின் 7 சதவீதமாக இருந்த வரவு செலவுத் திட்டக்குறை (கொடைகளின் பின்னர்) வெளிநாட்டு நிதியிடலின் மூலமும் - மொ. உ. உற்பத்தியில் 1.9 சதவீதம், உள்நாட்டு வங்கியல்லா மூலகங்களின் மூலமும் மொ.உ. உற்பத்தியில் 4-1 சதவீதம் நிதியிடப்பட்டதுடன் மிகுதி வங்கித் தொழில் முறையினூடாக நிதியிடப்படுவதற்காக விடப்பட்டது. இதன் காரணமாக மொ. உ. உற்பத்தி தொடர்பாக வங்கி நிதியிடல் 1994 இன் 0.2 சதவீதத்திலிருந்து 1995 இல் 1.1 சதவீதத்திற்கு உயர்ந்து பணநிரம்பலின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியது.


அரசு, மத்திய வங்கியிடமிருந்து ரூ. 87,600 இலட்சத்தினைக் கடன்பட்டது. இது திறைசேரி உண்டியல்களூடாகத் திரட்டப்பட்ட ரூ. 74,260 இலட்சத்தையும் தற்காலிக முற்பணங்களின் பேரிலான ரூ. 13,340 இலட்சத்தையும் உள்ளடக்கியிருந்தன. மத்திய வங்கியுடன் கட்டி யெழுப்பப்பட்ட அரசின் காசு நிலுவை ரூ. 2,270 இலட்சத்தில் காணப்பட்டமையும் சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள் ரூ. 8,710 இலட்சத்தினால் குறைவடைந்தமையும் கவனத்திற் கொள்ளப்பட்ட விடத்து, மத்திய வங்கியினால் அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் 1995 இல் ரூ.76,620 இலட்சமாக விளங்கி பொருளாதாரத்தில் ஒதுக்குப் பணம் (உயர்வலு நாணயம்) விரிவடைய உதவியது. அரசின் இறக்குமதி உண்டியல் உடைமைகள் (ரூ. 25,480 இலட்சம்), அரசிற்கான மேலதிகப் பற்றுக்கள் (ரூ. 3,790 இலட்சம்), சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள் (ரூ. 8,560 இலட்சம்) என்பன அதிகரித்தபோதும் அரசிற்கான வர்த்தக வங்கியின் தேறிய கொடுகடன் ரூ. 5,970 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வர்த்தக வங்கிளின் சொத்துப் பட்டியலில் திறைசேரி உண்டியல் மற்றும் அரச பிணைகளின் உடைமைகளும் (ரூ. 41,860 இலட்சம்) கட்டியெழுப்பப்பட்ட வைப்புக்களும் (ரூ. 1,940 இலட்சம்) குறைவடைந்தமையே காரணமாகும். ஆகவே 1995 இல் பொதுவான இறைத் தொழிற்பாடுகள் வங்கித் தொழில் முறையிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடனை ரூ. 70,650 இலட்சத்தினால் அதிகரிக்கச் செய்தது.

## 8.7 அரச படுகடன்

1995 இறுதியில் அரச படுகடன் ரூ. 6,315,930 இலட்சமாக விளங்கி 15 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்படி, அரச படுகடன்/ மொ. உ. உற்பத்தி விகிதம் முன்னைய ஆண்டின் மட்டமான 95 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. மொத்தப் படுகடனில் உள்நாட்டுப் படுகடன் 45 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் 55 சதவீதம் வெளிநாட்டுக் கடனின் பேரில் காணப்பட்டது.

### உள்நாட்டுப் படுகடன்

மொத்த வெளிநின்ற படுகடனில் 45 சதவீதத்திற்கு வகைகூறிய உள்நாட்டுப் படுகடன் 1995 இறுதியில் ரூ. 2,857,590 இலட்சத்திற்கு 15 சதவீதத்தினால் அதிகரித்தது. 1994 இல் உள்நாட்டுப்




படுகடன் இருப்பு முன்னைய ஆண்டினதிலும் பார்க்க 17 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டுப் படுகடனில் ரூ. 1,274,710 இலட்சம் அல்லது 45 சதவீதம் ஓராண்டு அல்லது அதற்கும் குறைவான முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட குறுங்காலப் படுகடன்களாக இருந்தன. ஆய்விற்குரிய ஆண்டில், குறுங்காலப் படுகடன் 1994 இல் அவதானிக்கப்பட்ட 7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில்17 சதவீதத்தினால் அதிகரித்தன. 1995 இல் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பிற்கு அரசின் காசுப் பாய்ச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியை நிதியிடுவதற்காக திறைசேரி உண்டியல்களூடான அதிகரித்த கடன்பாடுகளே காரணமாகும். திறைசேரி உண்டியல்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு மொத்தக் குறுங்காலப் படுகடனில் 89 சதவீதத்திற்கு வகைகூறிய வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி 1994 இறுதியின் ரூ. 988,960 இலட்சத்திலிருந்து 1995 இறுதியில் ரூ. 1,137,710 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. இது 1995 இல் ரூ.

அட்டவணை 8.5

## மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (அ)

ரூபா பத்து இலட்சம்

| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டுப் படுகடன் | 152,119 | 170,020 | 213,685 | 249,118 | 285,759 |
| குறுகிய கால | 84,412 | 97,924 | 101,845 | 108,725 | 127,471 |
| திறைசேரி உண்டியல்கள் | 72,968 | 84,996 | 91,343 | 96,360 | 113,771 |
| ரூபாப் பிணைகள் | 4,000 | 4,000 | – | 0 | 0 |
| தற்காலிக முற்பணங்கள் | 7,444 | 8,928 | 10,502 | 12,366 | 13,700 |
| நடுத்தர நீண்டகால | 67,707 | 72,096 | 111,840 | 140,393 | 158,289 |
| ரூபாப் பிணைகள் (ஆ) | 62,823 | 65,180 | 105,707 | 137,554 | 157,928 |
| திறைசேரி உண்டியல்கள் | - | 2,100 | 5,853 | 2,536 | 0 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் | 4,532 | 4,532 | - | 0 | 0 |
| திறைசேரிவைப்புச் சான்றிதழ்கள் | 153 | 102 | 114 | 145 | 200 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | 9 | 8 | 8 | 7 | 7 |
| நிருவாகக்கடன்பாடுகள் | 190 | 174 | 158 | 151 | 153 |
| படுகடன் கருவிகளின்படி | 152,120 | 170,020 | 213,685 | 249,118 | 285,759 |
| ரூபாப் பிணைகள் | 66,823 | 69,180 | 105,707 | 137,554 | 157,928 |
| திறைசேரி உண்டியல்கள் | 72,968 | 87,096 | 97,196 | 98,896 | 113,771 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் | 4,532 | 4,532 | ) | 0 | 0 |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் | 153 | 102 | 114 | 145 | 200 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | 9 | 8 | 8 | 7 | 7 |
| தற்காலிக முற்பணங்கள் | 7,444 | 8,928 | 10,502 | 12,366 | 13,700 |
| ஏனையவை | 191 | 174 | 158 | 151 | 153 |
| நிறுவனங்களின்படி | 152,120 | 170,020 | 213,684 | 249,119 | 285,760 |
| வங்கிகள் | 52,145 | 58,111 | 90,134 | 100,043 | 113,355 |
| மத்திய வங்கி | | | | | |
| படுகடன் கருவிகளின்படி | 42,486 | 34,932 | 16,480 | 21,345 | 28,684 |
| ரூபாக் கடன்கள் | 10 | 6 | ) | – | - |
| திறைசேரி உண்டியல்கள் | 35,032 | 25,998 | 5,978 | 8,979 | 14,984 |
| தற்காலிக முற்பணங்கள் | 7,444 | 8,928 | 10,502 | 12,366 | 13,700 |
| வர்த்தக வங்கி | | | | | |
| படுகடன் கருவிகளின்படி | 9,659 | 23,179 | 73,654 | 78,698 | 84,671 |
| ரூபாக் கடன்கள் | 414 | 413 | 24,088 | 24,840 | 24,928 |
| திறைசேரி உண்டியல்கள் | 9,239 | 22,760 | 49,566 | 53,858 | 59,742 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் | 5 | 5 | ) | 0 | 0 |
| ஏனையவை | 1 | 1 | ) | 1 | 1 |
| நிறுவனங்களின்படி | 9,659 | 23,179 | 73,654 | 78,698 | 84,671 |
| இலங்கை வங்கி | 6,791 | 15,753 | 40,333 | 39,469 | 42,298 |
| மக்கள் வங்கி | 2,182 | 2,938 | 15,690 | 18,363 | 17,802 |
| ஏனையவை | 686 | 4,488 | 17,630 | 20,867 | 24,571 |
| கடன்கரைப்பு நிதியம் | 840 | 359 | 239 | 137 | 100 |
| ரூபாக் கடன்கள் | 840 | 359 | 239 | 137 | 100 |
| **வங்கியல்லாத் துறை** | | | | | |
| படுகடன் கருவிகளின்படி | 99,134 | 111,550 | 123,311 | 148,939 | 172,304 |
| ரூபாக் கடன்கள் | 65,559 | 68,402 | 81,379 | 112,577 | 132,900 |
| திறைசேரி உண்டியல்கள் | 28,697 | 38,338 | 41,652 | 36,059 | 39,044 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் | 4,527 | 4,527 | | | |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் | 153 | 102 | 114 | 145 | 200 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | 9 | 8 | 8 | 7 | 7 |
| ஏனையவை | 190 | 173 | 158 | 151 | 153 |
| நிறுவனங்களின்படி | 99,134 | 111,551 | 123,311 | 148,938 | 172,304 |
| தேசிய சேமிப்பு வங்கி | 26,558 | 30,782 | 37,767 | 46,407 | 48,406 |
| சேமிப்பு நிறுவனமும் தனிப்பட்டோரும் | 13,031 | 14,981 | 13,165 | 15,811 | 19,349 |
| ஊழியர் சேம நிதியம் | 45,862 | 54,563 | 65,645 | 79,745 | 95,000 |
| காப்புறுதி நிறுவனங்கள் | 4,074 | 4,035 | 244 | 312 | 303 |
| நிதி நிறுவனங்கள் | 2,427 | 3,131 | 5,868 | 5,942 | 8,420 |
| ஏனையவை | 7,182 | 4,060 | 622 | 721 | 826 |
| திணைக்கள. அலுவல்சார் நிதி | 34 | 428 | 453 | 556 | 662 |
| வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகள் | 190 | 174 | 158 | 151 | 153 |
| ஏனையவை | - | - | - | 14 | 11 |
| மொத்த வெளிநாட்டுப் படுகடன் | 214,579 | 235,538 | 270,224 | 301,812 | 345,834 |
| வகைகளின்படி | 214,579 | 235,538 | 270,224 | 301,812 | 345,834 |
| செயற்றிட்டக் கடன்கள் | 166,149 | 185,003 | 216,355 | 246,075 | 286,515 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 48,430 | 50,536 | 53,869 | 55,737 | 59,320 |
| பண்டக் கடன்கள் | 46,037 | 48,550 | 52,120 | 54,147 | 57,715 |
| ஏனையவை | 2,393 | 1,986 | 1,749 | 1,590 | 1,604 |
| நிறுவனங்களின்படி | 214,579 | 235,538 | 270,224 | 301,812 | 345,834 |
| சலுகை அடிப்படையிலான கடன்கள் | 202,554 | 225,132 | 260,557 | 292,463 | 335,595 |
| பல்புடை | 78,084 | 91,067 | 109,283 | 123,016 | 144,636 |
| இருபுடை | 124,470 | 134,065 | 151,273 | 169,447 | 190,960 |
| வர்த்தகக் கடன்கள் | 12,024 | 10,406 | 9,667 | 9,350 | 10,239 |
| வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன் | 1,260 | 1,094 | 1,065 | 950 | 1,020 |
| மொத்த வெளிநின்ற அரச படுகடன் | 366,698 | 405,558 | 483,909 | 550,930 | 631,593 |
| கடன் கரைப்பு நிதியம் நீங்கலான வெளிநின்ற மொத்த அரச படுகடன் | 365,858 | 405,199 | 483,589 | 550,884 | 631,593 |

(அ) ஆண்டின் இறுதியிலுள்ள பெறுமதி

(ஆ) 1993 இன் ரூ. 240,880 இலட்சம் கொண்ட நீண்டகால முறிகள் உட்பட

164,750 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்களின் புதிய வழங்கல்களினதும் ரூ. 16,000 இலட்சம் கொண்ட மீளக் கொடுப்பனவுகளினதும் விளைவேயாகும். 1994இல் அரசாங்கம் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக ரூ. 17,000 இலட்சத்தினை மட்டுமே திரட்டியது. திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட உச்ச எல்லை 1992 திசெம்பர் 16 இலிருந்து ரூ. 1,250,000 இலட்சமாக மாற்றமின்றியிருந்துவருகின்றது. அரசின் குறுங்காலப் படுகடனில் எஞ்சிய 11 சதவீதத்திற்கும் வகைகூறிய மத்திய வங்கி முற்பணங்கள் 1995 இறுதியில் ரூ. 137,000 இலட்சத்திற்கு ரூ. 13,340 இலட்சத்தினால் அதிகரித்தன.

நடுத்தர, நீண்டகாலப் படுகடன் கடந்த ஆண்டின் 26 சதவீத அதிகரிப்பு வீதத்துடன் ஒப்பிடுகையில் 13 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 1,582,890 இலட்சமாக விளங்கியது. பெறுமதி நியதிகளில், நடுத்தரல, நீண்டகால படுகடனின் அதிகரிப்பு ரூ. 178,960 இலட்சமாக இருந்தது. எனினும், நடுத்தர நீண்டகாலப் படுகடன் 1994இன் 56 சதவீதத்திலிருந்து 1995 இல் 55 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளமையால் அரச உள்நாட்டுப் படுகடன் இருப்பு குறுங்கால படுகடனை நோக்கிப் பெயர்ந்துள்மையைக் காட்டுகின்றது. 1992 இல் நடுத்தர நீண்டகால படுகடன் விகிதம் 42 சத வீதத்திலிருந்து 1993இல் 52 சதவீதத்திற்கு அதிகரித்து 1994 இல் 56 சத வீதத்திற்கு மேலும் அதிகரித்தமையின் காரணமாக 1993இற்குப் பின்னர் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு மாறானதாக இருந்தது. 1994 இல் உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலில் இருந்த ரூ. 25,360 இலட்சம் கொண்ட நடுத்தரகால திறைசேரி உண்டியல் உடைமைகள் மீள் கொடுப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக 1995 இல் நடுத்தர நீண்டகாலப் படுகடனில் பெரும்பாலும் முழுவதும் ரூபாக் கடன்களையே உள்ளடக்கியிருந்தன.

உள்நாட்டுப் படுகடனில் பெருந்தொகை ரூபாக் கடன் வழங்கல்களூடாகவே திரட்டப்பட்டமையால் இப்படுகடன் கருவியின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூ. 1,375,540 இலட்சம் கொண்ட வெளிநின்ற தொகையினைவிட 15 சதவீதத்தினால் அதிகரித்தது. 1995 சனவரியில் தொடங்கிய 1995 இற்கான ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், கடன்களின் 10 தொடர்கள் மிதக்கவிடப்பட்டதனூடாக ரூ. 467,150 இலட்சம் பெற்றுக்கொள்ளப்பட்டது. இக்கடன்கள் ஆண்டிற்கு 14 சதவீத வட்டியைக் கொண்டிருப்பதுடன் விருப்பத்திற்குரிய முதிர்ச்சிக் காலமான 5-6 ஆண்டுகளையும், 5-7 ஆண்டுகளையும் கொண்டிருந்தன. மேலும் இவ்வாண்டில் ரூ. 263,290 இலட்சம் கொண்ட ரூபாக் கடன்கள் மீளச் செலுத்தப்பட்டன. இதன் விளைவாக ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக திரட்டப்பட்ட தேறிய மூலவளங்கள் ரூ. 203,860 இலட்சமாக விளங்கி 1995 இறுதியில் ரூ. 1,579,280 இலட்சம் கொண்ட வெளிநின்ற ரூபாக் கடன் பொறுப்புக்களை விளைவித்தன. இது இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ரூ. 240,880 இலட்சம் கொண்ட நீண்டகால முறிகளையும் (30 ஆண்டு முதிர்ச்சி) இது உள்ளடக்கும். ஊழியர் சேமநிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கான இரு முக்கிய உதவுநர்களாகத் தொடர்ந்தும் விளங்கி 1995 இறுதியில் வெளிநின்ற மொத்த ரூபாக் கடன்களில் 81 சதவீதத்திற்கு வகைகூறியது. ஆய்விற்குரிய ஆண்டில் ரூ. 240,880 இலட்சம் தொகைகொண்ட நீண்டகால முறிகள் நீங்கலாக, வெளிநின்ற ரூபாப் பிணைகள் பெரும்பாலும் முழுவதும் வங்கியல்லாத் துறைவசமே இருந்தன.

அரசின் படுகடன் சொத்துப் பட்டியலில் சார்பு ரீதியில் முக்கியத்துவமற்றதாக இருந்தபோதும் திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு 1994 இறுதியின் ரூ. 1,450 இலட்சத்திலிருந்து 1995 இறுதியில் ரூ. 2,000 இலட்சத்திற்கு அதிகரித்தது. திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் 6,12, மாத முதிர்ச்சிக் காலத்துடன் முறையே 17.15, 18.06 சதவீத வட்டிகளில் வழங்கப்பட்டன. வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகளின் பேரிலான மொத்த ரூபாப் பொறுப்புக்கள் ரூ. 1,530 இலட்சமாக விளங்கியவேளையில் வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் மீதான பொறுப்பு 1995 இறுதியில் ரூ. 70 இலட்சம் மிகச் சிறியளவில் காணப்பட்டது.

### வெளிநாட்டுக் கடன்பாடு

1995 இறுதியில் ரூ. 3,458,340 இலட்சமாக விளங்கிய மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் முன்னைய ஆண்டினைவிட ரூ. 440,220 இலட்சம் அல்லது 15 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ.153,350 இலட்சம் கொண்ட தேசிய கடன் பாடுகளையும் செலாவணி வீதங்களின் அசைவுகளின் மாற்றல்களினால் தோன்றிய ரூ. 286,870 இலட்சம் கொண்ட மேலதிக பொறுப்புக்களையும் உள்ளடக்கியிருந்தது. முன்னைய

ஆண்டினைப் போன்றே, மொத்த படுகடனில் வெளிநாட்டுப் படுகடன் 55 சதவீதங்களுக்கு வகைகூறியது.

சலுகைக் கடன்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு ரூ. 3,355,950 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினை விட ரூ. 431,320 இலட்ச அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. இவ்வதிகரிப்பு சலுகை நியதிகளில் பெறப்பட்ட ரூ. 226,340 இலட்சம் கொண்ட வெளிநாட்டு உதவிகள் ரூ. 71,610 இலட்சம் கொண்ட மீள் கொடுப்பனவுகள், வெளிநாட்டு செலாவணி மாறுபாடுகளின் பேரிலான ரூ. 276,600 லட்சம் கொண்ட மேலதிக பொறுப்புக்கள் என்பனவற்றின் விளைவாக ஏற்பட்டதாகும். எனினும், வெளிநாட்டு படுகடனில் சலுகை ரீதியான கடன்கள் 1994 இனைப் போன்று 97 சதவீதத்தில் காணப்பட்டன. இருபுடைக் கடன்கள் ரூ. 1,909,600 இலட்சத்தினை அல்லது சலுகைக் கடன்களின் 57 சத வீதத்தினை உள்ளடக்கியிருந்த வேளையில் மிகுதி ரூ. 1,446,350 இலட்சம் பல்புடை உடன்படிக்கைகளினூடாகப் பெறப்பட்டன. வர்த்தக அடிப்படையில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான வெளிநின்ற பொறுப்பு ரூ. 102,390 இலட்சமாகக் காணப்பட்டது.

செயற்றிட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்ட கடன்களின் பேரிலான பொறுப்பு ரூ. 2,865,150 இலட்சமாக அமைந்து, 1994இல் பதிவுசெய்யப்பட்ட மட்டத்திலும் பார்க்க ரூ. 404,400 இலட்ச அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. இது ரூ. 222,460 இலட்சம் கொண்ட உட்பாய்ச்சல் ரூ. 55,520 இலட்சம் கொண்ட மீள் கொடுப்பனவுகள் செலாவணி வீத மாறுபாடுகளின் காரணமாக வெளிநின்ற வைப்புக்கள் ரூ. 237,450 இலட்சத்தினால் அதிகரித்தமை என்பனவற்றின் தேறிய விளைவாகும். பண்டக் கடன்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு ரூ. 577,150 இலட்சத்திற்கு உயர்வடைந்தமைக்கு ரூ. 12,510 இலட்சம் கொண்ட மீள் கொடுப்பனவும் செலாவணி வீதத் தளம்பல்களிலிருந்து தோன்றிய ரூ. 48,190 இலட்சம் பொறுப்பும் காரணமாக இருந்தன. செயற்றிட்ட நிகழ்ச்சித்திட்டக் கடன்களில் ஏறத்தாழ 95 சதவீதமானவை இருபுடை மற்றும் பல்புடை மூலங்களிலிருந்து பெறப்பட்ட வேளையில் பண்டக் கடன்கள் முழுவதும் இருபுடை முயற்சிகளிலேயே பெற்றுக்கொள்ளப்பட்டன. வெளிநாட்டுக் படுகடன் மீதான செலாவணி வீத மாறுபாடுகளின் தாக்கம் அட்டவணை 8.6 இல் தரப்பட்டுள்ளன.

### அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ. 365,460 இலட்சம் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் ரூ. 382,260 இலட்சம் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி மொத்தம் ரூ. 747,720 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 23 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1994 இன் 10.5 சதவீதத்திலிருந்து 1995இல் 11.3 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு ரூபாக்கடன்களின் பேரிலான உள்நாட்டுப் படுகடனின் முதிர்ச்சி ரூ. 263,290 இலட்சமாக அமைந்து உயர்ந்தளவில் காணப்பட்டமையே முக்கிய காரணமாகும். முதிர்ச்சியடைந்த திறைசேரி உண்டியல்களின் ரூ. 16,000 இலட்சத்தையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டுப் படுகடன் மீள் கொடுப்பனவுகள் 1995 இல் ரூ. 280,690 இலட்சமாக விளங்கின. 1995 இல் வெளிநாட்டுக் கடன்களின் மீள் கொடுப்பனவுகள் ரூ. 84,770 இலட்சமாக இருந்தன. இதில் ரூ. 55,520 இலட்சம் கொண்ட மீள் கொடுப்பனவுகள் செயற்றிட்ட நிகழ்ச்சித்திட்ட கடன்களின் பேரில் காணப்பட்ட வேளையில் ரூ. 27,810 இலட்சம் பண்டக் கடன்களின் பேரில் காணப்பட்டன.

**அட்டவணை 8.6**
**வெளிநாட்டுக் கடன்கள் மீதான செலாவணிவீத மாறுபாட்டின் தாக்கம் 1991 - 1995 (அ)**

ரூ. ப. இலட்சம்

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995* |
|---|---|---|---|---|---|
| மொத்த வரவுகள் | 25,969 | 15,316 | 16,839 | 19,384 | 23,812 |
| மீள் கொடுப்பனவுகள் | 4,881 | 7,955 | 6,984 | 7,606 | 8,477 |
| தேறிய வரவுகள் | 21,088 | 7,361 | 9,855 | 11,778 | 15,335 |
| செலாவணி வீத மாறுபாடுகளின் காரணமாக ஏற்பட்ட பொறுப்பில் மாற்றம் | 16,607 | 13,599 | 24,831 | 19,810 | 28,687 |
| கால முடிவில் உள்ள பொறுப்பு | 214,578 | 235,538 | 270,224 | 301,812 | 345,834 |

(அ) தரவுகள் பதிவுசெய்யப்படும் நாளில் உள்ள பெறுமதி முறையை அடிப்படையாகக் கொண்டவை
* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 8.7
## அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1991 - 1995

ரூ. ப. இலட்சம்

| விடயம் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995* |
|---|---|---|---|---|---|
| படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 39,855 | 52,018 | 57,493 | 60,702 | 74,772 |
| கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் | 17,782 | 26,078 | 27,290 | 22,671 | 36,546 |
| உள்நாடு | 12,901 | 18,123 | 20,327 | 15,065 | 28,069 |
| வெளிநாடு | 4,881 | 7,955 | 6,963 | 7,606 | 8,477 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 22,073 | 25,940 | 30,203 | 38,031 | 38,226 |
| உள்நாடு | 17,960 | 21,201 | 25,101 | 32,520 | 32,064 |
| குறுங்காலம் | 10,410 | 11,923 | 13,351 | 18,712 | 13,947 |
| நடுத்தர நீண்டகால | 7,550 | 9,278 | 11,750 | 13,808 | 18,117 |
| வெளிநாடு | 4,113 | 4,739 | 5,102 | 5,511 | 6,162 |
| வட்டி/நடைமுறைச் செலவு (%) | 26.35 | 28.94 | 29.53 | 29.93 | 26.17 |
| படுகடன் பணி/ மொ.உ.உ. (%) | 10.70 | 12.23 | 11.50 | 10.48 | 11.30 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டு, வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக்கொடுபனவுகள் நடைமுறைச் செலவினத்தில் 26 சதவீதத்திற்கும் அரச அரசிறையில் 28 சதவீதத்திற்கும் வகைகூறியதுடன் அரச வரவு செலவுத் திட்ட தொழிற்பாடுகளின் மீது பெரும் சுமையை ஏற்படுத்தின. ரூபாப் பிணைகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 181,170 இலட்சமாக விளங்கி 31 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வெளிநின்ற ரூபாக் கடன்களில் ஏற்பட்ட உயர்வே காரணமாகும். இது 1994 மற்றும் 1995 இல் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டங்களின்மீது பெருமளவிற்கு தங்கியிருந்தமையின் விளைவாகும். ரூபாக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ஆண்டிற்கு இரு தடவைகள் செலுத்தப்படுவதனால் 1994இன் பின்னரைப் பகுதியிலும் 1995 இன் முன்னரைப் பகுதியிலும் உயர்த்தப்பட்ட ரூபாக் கடன்களின் வட்டிச் செலவு 1995 இல் பிரதிபலிக்கப்பட்டது. வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் இருப்புக்களில் அதிகரிப்புக் காணப்பட்டபோதும் இக் கருவிகளின் பேரிலான வட்டிக் கொடுப்பனவுகள் 1994 இல் காணப்பட்ட 40 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 139,470 இலட்சத்திற்கு 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 1994 இலும் 1995 இலும் முதல் நான்கு மாதங்களிலும் காணப்பட்ட சார்பு ரீதியிலான குறைந்த வட்டி வீதங்களே காரணமாகும். 1995 இல் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 61,620 இலட்சத்திற்கு 12 சதவீதத்தினால் அதிகரித்தன. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் மீதான புள்ளிவிபரத் தொகுப்பு அட்டவணை 8.7 இல் தரப்பட்டுள்ளன.